
# இறையியல் கோலங்கள்

வடிவம் 18 டிசம்பர் 2005 வண்ணம் 4



# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்

# IRAI IYAL KOLANKAL

Tamil Theological Quarterly


Vol : 18
No : 04
December : 2005

வடிவம் : 18
வண்ணம் : 04
டிசம்பர் : 2005



புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,
இலங்கை.

**ஆசிரியர் :**

அருட்தந்தை ச. வி. ப. மங்களராஜா

**துணை ஆசிரியர் :**

அருட்தந்தை. சா. பி. கிருபானந்தன்
அருட்தந்தை. ப. ஜோ. ஜெபரட்ணம்
அருட்தந்தை. பி. கிறிஸ்துநாயகம்

**நிர்வாக குழு :**

அருட்சகோ. யே. ஜெஸ்லி ஜெகானந்தன்
அருட்சகோ. எ. எட்வினாதன்
அருட்சகோ. சூ. மில்ரன் தேவராஜ்
அருட்சகோ. அ. கிறிஸ்ரி றூபன் பெனாண்டோ
அருட்சகோ. அ.ஜெ.அ. ஜெயரஞ்சன்
அருட்சகோ. ஆ. மைக் மயூரன்

**வெளியீடு :** புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம், இலங்கை.

**Editor :**

Fr. S. V. B. Mangalarajah

**Sub Editors :**

Fr. S. F. Kirupananthan
Fr. P. J. Jebaratnam
Fr. P. Christunayagam

**Administrative Board :**

Bro. J. Jesly Jehananthan
Bro. E. Edwinathan
Bro. S. Milton Devaraj
Bro. A. Christy Ruban Fernando
Bro. A.J.A. Jeyaranjan
Bro. A. Mac Mayooran

**Publication :** St. Francis Xavier's Seminary,
Columbuthurai, Jaffna, Sri Lanka.
Tel No.: 021 222 2482, 021 222 7145.

# பொருளடக்கம்


01. ஆசிரியரிடமிருந்து ........

02. இயற்கை அனர்த்தங்கள்: ஓர் இறையியல் கண்ணோட்டம்

*அருட்சகோதரி அ. ரஜனி - தி.சி.*

03. நற்கருணை ஆண்டு: குருக்கள், பொதுநிலையினர்

*அருட்திரு. இ. தயாபரன்*

04. திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுலின் சிந்தனைகள்: பெண்கள், மரியாள், நற்கருணை

*அருட்திரு. யே. அ. அருள்தாசன்*

05. "விண்ணிலிருந்து விடியல் ஒன்று"

*அருட்சகோ. அ. கிறிஸ்ரிறூபன் பெனான்டோ*

06. இரண்டாம் வத்திக்கான் சங்கம் நாற்பது ஆண்டுகளின் பின்னர்

*அருட்திரு. ம. டேவிட்*

07. இவ்விதழின் இறையியலாளர் - புனித 10ம் பத்திநாதர்

*அருட்சகோதரி. விக்ரறின் செல்வதி மலக்கியாஸ் - தி.கு.*

09. SYNOPSIS

10. குறுக்கெழுத்துப் போட்டி

# ஆசிரியரிடமிருந்து.....

**அன்புள்ள வாசகர்களே,**

இவ்விதழ் சற்றுக்காலம் தாழ்த்தி உங்களை வந்தடைவதற்கு மன்னிக்க வேண்டுகிறேன்.

இவ்விதழில் மணம் பரப்பும் ஆக்கங்கள் இக்காலத்தின் உலகிலும் திருச்சபையிலும் நிகழும் பல்வேறு நிகழ்வுகளை மையப்படுத்தி வரையப் பட்டுள்ளன.

எங்கள் மண்ணில் பெரும் உயிர் இழப்பையும், பொருள் இழப்பையும் ஏற்படுத்திய 'சுனாமி' – அதனைத் தொடர்ந்து உலகில் பல்வேறு இடங்களில் ஏற்பட்ட இயற்கை அழிவுகள் பாதிக்கப்பட்டவர்களைப் பல்வேறு கேள்விகளைக் கேட்கத் தூண்டியுள்ளன. எல்லாம் வல்ல, அன்பே உருவான இரக்கம் நிறைந்த இறைவனில் நம்பிக்கை கொண்டுள்ள நாம் அளிக்கும் பதில் என்ன?

அண்மையில் இறைவனடி சேர்ந்த எம் பாசமிகு திருத்தந்தை 2ம் யோவான் பவுல் காலத்தினதும் திருச்சபையினதும் தேவையுணர்ந்து அரும்பணியாற்றிய பெரும் தலைமை ஆயர் – தூரநோக்குடன் செயல்பட்ட இறைப்பணியாளர் கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் சிகரமுமாகிய நற்கருணை இவரது தலைமை ஆயர் பணிக்காலத்தின் 27 ஆண்டுகளிலும் நடுநாயகமாக விளங்கியிருந்ததை இவரது சுற்று மடல்களிலிருந்தும் மறையுரைகளிலிருந்தும் அறிந்து கொள்ளலாம். இவர் தமது திரு ஆட்சியின் இறுதியாண்டில் பிரகடனப்படுத்திய நற்கருணை ஆண்டின் எதிர்பார்ப்புக்கள் குருக்களிலும், பொதுநிலையினரிலும் எமது மறை வட்டங்களில், பங்குகளின் நிறைவேறியுள்ளனவா?

பெண்களுக்கெதிராகப் பல்வேறு அநீதிகள் இழைக்கப்படும் பின்னணியில் அவர்களது மகத்துவத்தைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டுவதும் கன்னிமரியாள் மட்டில் திருத்தந்தை கொண்டிருந்த பற்றுதலும் எம்மைச் சிந்திக்கத் தூண்ட வேண்டும்.

2ம் வத்திக்கான் பொதுச்சங்கம் திருச்சபை தன்னை ஆய்வு செய்து, புதுப்பித்து முன்னேறிச் செய்வதில் ஒருபாரிய திருப்புமுனை. ஆயினும் சங்கம் நிறைவு பெற்று 40 ஆண்டுகளின் பின்னரும் எதிர்பார்த்தளவு நாம் முன்னேறவில்லையென்றால் மீளவும் எல்லாமட்டத்திலும் ஒரு சுய ஆய்வு செய்யப்படவேண்டும் என்பது தான் பொருள் .

வருடாவருடம் நினைவுகூரப்பட்டு கொண்டாடப்படும் கிறிஸ்து பிறப்பு விழா புதிய புதிய சவால்கள் நிறைந்த சூழ்நிலைகளுக்கு ஏற்ற அர்த்தம் கொடுக்க வேண்டியுள்ளது. இல்லாவிடில் அது ஒரு சடங்காக அல்லது வெளிக்கொண்டாட்டங்களுள் மட்டும் கடந்து செல்லும் ஒரு சிலு சிலுப்பாக மட்டுமேயிருக்கும். இந்த அர்த்தத்தைக் கொடுக்கும் ஆற்றலும் கடமையும் நம் ஒவ்வொருவரிலுமே தங்கியுள்ளது.

பிறந்திருக்கும் புதிய ஆண்டில் நாமும் புத்தூக்கம் பெற்றவர்களாக உலகிற்கும் திருச்சபைக்கு புத்துயிர் கொடுத்தும் உண்மையான அமைதியைக் கொணரும் சிந்தனையாளர்களாக செயல்வீரர்களாகவும் மற்றவர்களாலும் சிந்தித்துச் செயலாற்றத் தூண்டும் ஊக்குவிப்பாளர்களாக செயல்படுவோமாக.

**நன்றி**

**S.U.R. மங்களராஜா**

# இயற்கை அனர்த்தங்கள்: ஓர் இறையியல் கண்ணோட்டம்

அருட்சகோதரி. அ. றஜனி தி.சி.

## முன்னுரை

மனிதனையும் இயற்கையையும் பிரித்துப் பார்க்க முடியாது. ஏனெனில் கடவுள் மனிதனைப் படைத்து அதற்கு அனுகூலமாகவே அனைத்துப் படைப்புக்களையும் படைத்து அவற்றைப் பயன்படுத்தி பராமரிக்க அவனுக்கு அறிவுறுத்தினார். அவர் படைத்த அனைத்தும் நல்லதாகவே கண்டார். அதனால்தான் "இயற்கையில் உறைந்திடும் இணையற்ற இறைவா என் இதயத்தில் எழுந்திடவா" என்று இறைவனை இயற்கையின் அழகினிலும், அமைதியிலும் உறைவதாகக் காண்கிறோம். ஆனால் அந்த இயற்கையே இன்று ஆட்கொல்லியாக மாறி பூகம்பம் என்றும், சுனாமி என்றும், எரிமலை, சூறாவளி, வெள்ளப்பெருக்கு என்றுமாக பல்வேறு விஸ்வரூபங்கள் எடுத்து மானிட குலத்தையே அழித்து, சொத்துக்களை நாசம்பண்ணி பல அப்பாவி உயிர்களை

> கடவுள் மனிதனைப் படைத்து அதற்கு அனுகூலமாகவே அனைத்துப் படைப்புக்களையும் படைத்து அவற்றைப் பயன்படுத்தி பராமரிக்க அவனுக்கு அறிவுறுத்தினார். அவர் படைத்த அனைத்தும் நல்லதாகவே கண்டார்.

காவு கொள்கின்றது. முழு உலகுமே "ஏன் கடவுள் எங்களை இவ்வாறாக இயற்கையின் மூலமாகப் பழிவாங்குகின்றார்?" 'இந்த சின்னஞ்சிறுசுகள், பச்சிளங்குழந்தைகள் என்ன பாவம் செய்தது இறைவா?' என்றவாறாகக் கேள்வி எழுப்பிக் கொண்டிருக்கின்றது. இந்த வேளைகளில் இறையியல் கண்ணோட்டத்தில் இந்த இயற்கை அனர்த்தங்கள் எமக்கு எதை உணர்த்துகின்றன என்பதை சற்று ஆராய முற்படுகின்றேன்.

## இயற்கை அனர்த்தமும் முழு உலகும்:

கடந்த மூன்று வருடங்களுக்குள்ளே இந்த உலகம் இயற்கை அனர்த்தத்தினால் சந்தித்த இழப்புக்களைப் போன்று அதன் வரலாற்றிலே கண்டிருக்கவில்லை. 26-12-2004ம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி பேரலையின் அனர்த்தம் காரணமாக 250,676க்கும் அதிகமாக உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளது. கடற்கரையோரங்கள் எங்குமே சடலங்களாகவே காட்சியளித்தன. 2005ம் ஆண்டில் இந்தியாவில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 8,000க்கும் அதிகமானோர் பலியாகினர்: இந்தோனேசியாவில் ஏற்பட்ட காட்டுத்தீயினால் பல உயிர்கள் பறிக்கப்பட்டன. மேலும் அண்மையில் அமெரிக்காவில் ஏற்பட்ட சூறாவளிகளான றீற்றா, வில்மா போன்றவைகளின் அகோர தாக்கத்தினால் 16,000க்கும் அதிகமானோர் இறந்தும் காணாமற் போயுமுள்ளனர். பாகிஸ்தானிலும், இந்தியாவின் காஸ்மீர் எல்லைப் புறங்களிலும் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் காரணமாக 80,000க்கும் அதிகமானோர் இறந்தும் காணாமற் போயும் உள்ளனர். இவ்வாறான இயற்கை அனர்த்தங்கள் இடம்பெற்ற இடங்கள் எல்லாம் அளவுக்கு அதிகமான சொத்துக்களும், மிருகங்களும் அழிக்கப்பட்டுள்ளன. அடுத்த கணப்பொழுதில் என்ன நடக்குமோ என்று முழு உலகுமே பயந்திருக்கின்றது. மனிதன் மனிதனை அழிப்பதற்காக அணு ஆயுதம், நவீன குண்டுகள், யுத்த விமானங்கள் ஆகியவற்றைத் தயாரித்து தனது பலத்தையும், தன்னால் முடியும் என்ற ஆணவத்தைக் காட்டிக் கொள்ள முனைகின்றபோது இவ்வாறான இயற்கை அனர்த்தங்கள் அமெரிக்கா, பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளுக்கு பெரிதும் சவாலாகவே அமைந்துள்ளது.

## இயற்கை அனர்த்தமும் இலங்கையும்:

இலங்கை நாடானது 65,610 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டு நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ள ஒரு தீவாகக் காணப்படுகிறது. கடந்த 5 வருடங்களுக்குள்ளே இலங்கையில் இயற்கை அனர்த்தத்தினால் இறந்தவர்கள்

சுனாமி - 38,195

மண்சரிவு - 045

கடும்மழை சூறாவளியால் காணாமற்போனவர்கள் - 027

வெள்ளப்பெருக்கினால் இறந்தவர்கள் - 231

பல இலட்சக்கணக்கான சொத்துக்களும், பொருட்களும் அழிக்கப்பட்டும், சேதமாக்கப்பட்டும் உள்ளன. பல தேவாலயங்களும் கூட தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. சுனாமி, அனர்த்தத்தினால் இறந்தவர்கள் அதிகமானவர்கள் சிறுவர்களும், பெண்களுமே ஆவர்.

"கடவுள் எங்கே?" "கடவுள் ஏன் எங்களைத் தண்டிக்க வேண்டும்?" "கடவுளுக்கு கண்ணில்லையா? நாங்கள் நம்பிய தெய்வம் எங்களை இப்படிக் கைவிட்டுவிட்டதே" இவைகள் தான் பாதிக்கப்பட்டவர்களின் தொடர்ச்சியான பல்லவியாக இருக்கின்றன. மற்றும் பலர் "இனி மேல் நாங்கள் கோவிலுக்குப் போகமாட்டோம். போவதனால் என்னபயன்" என்றும் வெறுப்புடன் இன்னும் இருக்கின்ற நிலை காணப்படுகின்றது. பிள்ளைகளைப் பறிகொடுத்தவர்கள், யாராவது ஆறுதல் வார்த்தைகள் கூறினால் "உங்களால் என்ர பிள்ளையைத் திருப்பித்தரமுடியுமா?" என்று கேட்கிறார்கள். இவர்கள் கூறுவது போன்று கடவுளுக்குக் கண்தான் இல்லையா? அல்லது கடவுள்தான் பழிவாங்க விட்டாரா? எமது பதில் என்னவாக இருக்கும் உண்மையிலேயே விசுவாசத்தின் அடிப்படையில் கடவுளுடைய எண்ணங்களும், அவருடைய செயல்களும் எங்களுடைய எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் அப்பாற்பட்டவை. ஆனால் கடவுள் யாரையும் பழித்துக் கொண்டு தனது கோபத்தை அநீதியாக வெளிப்படுத்துபவர் அல்லர். அவரை எமது அறிவினாலும் எண்ணங்களினாலும் விளங்கிக் கொள்ளமுடியாது. காரண காரியங்களுக்குள் அடக்கிவிடவும் முடியாது.

"கடவுள் எங்கே?" "கடவுள் ஏன் எங்களைத் தண்டிக்க வேண்டும்?" "கடவுளுக்கு கண்ணில்லையா? நாங்கள் நம்பிய தெய்வம் எங்களை இப்படிக் கைவிட்டுவிட்டதே" இவைகள் தான் பாதிக்கப்பட்டவர்களின் தொடர்ச்சியான பல்லவியாக இருக்கின்றன.

உண்மையிலேயே விசுவாசத்தின் அடிப்படையில் கடவுளுடைய எண்ணங்களும், அவருடைய செயல்களும் எங்களுடைய எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் அப்பாற் பட்டவை. ஆனால் கடவுள் யாரையும் பழித்துக் கொண்டு தனது கோபத்தை அநீதியாக வெளிப்படுத்துபவர் அல்லர்.

## இயற்கை அனர்த்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்கள்

### 1. சமூகக் கண்ணோட்டத்திலே:

❋ **இறப்புக்கள்** - கண்ணிமைக்கும் நேரத்திற்குள்ளே ஆயிரமாயிரம் அப்பாவிச் சிறுவர்கள், முதியவர்கள், ஆண்கள், பெண்கள் என்றவாறாக உயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது. இவர்களுடைய இறப்புக்களை இன்னும் எதுவுமே ஈடுசெய்ய முடியாமலே இருக்கின்றது.

❋ **காணாமற் போனவர்கள்** - இயற்கை அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களோடு இன்னும் காணாமல் போனவர்களும் இருக்கின்றனர். 2004ம் ஆண்டு இடம் பெற்ற சுனாமி அனர்த்தம் காரணமாக இலங்கை தேசிய அனர்த்த முகாமைத் துவ நிலையத்தின் அறிக்கையின்படி 5,023 பேர் காணாமற் போயுள்ளனர்.

❋ **இடம்பெயர்வுகள்** - இயற்கை அனர்த்தங்களின் காரணமாக ஆயிரக் கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து அகதிகளாகப் பாடசாலைகளிலும், தேவாலயங்களிலும் பொது மண்டபங்களிலும் தங்கள் இல்லிடங்களை இழந்து வாழ்ந்து வருகின்றனர்.

❋ **கையேந்து நிலையும், அகௌரவச் செயலும்** - இயற்கை அனர்த்தங் களினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் உறவுகள், உடைமைகள் எல்லாம் இழந்து வேறிடங்களில் அகதிகளாக தஞ்சம் புகுகின்றனர்.

❋ **அனாதைகள், ஆதரவற்றோர் அதிகரிப்பு** - இயற்கையின் சீற்றத்தினால் கணவனை இழந்த மனைவி, மனைவியை இழந்த கணவன், பெற்றோரை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளை இழந்த பெற்றோர், வயோதிபத்தாய் தந்தை யரை இழந்த பிள்ளைகள் என ஆதரவற்றோர்களை இந்த இயற்கை அனர்த் தங்கள் சமூகத்திலே அதிகரிக்கச் செய்துள்ளது.

❋ **மானிட இயல்பு வாழ்க்கை பாதிப்பு** - தனித்தனிக் குடும்பங்களாக பிள்ளை களுடன் வாழ்ந்த வதிவிடங்கள் அழிந்து போனதினால் கூட்டுவாழ்க்கை ஏற்பட்டுள்ளது. சுதந்திரமற்ற வாழ்க்கை, பொதுமலசல கூடங்கள், குளிக்கும் இடங்கள் பிரச்சினையாகிவிட்டது.

❋ **சிறுவர்களின் கல்வி பாதிப்பு** - சிறுவர்களின் கல்வி, மற்றும் அவர்களின் மனநிலை இயல்புகள், இன்னும் இந்த இயற்கை அனர்த்தங்களினால் பாதிப் புக்கள், வழமை நிலைமைக்குத் திரும்பாமலே இருக்கின்றன. இயற்கை

அனர்த்தங்களினால் இறக்கின்றவர்களும் கூடுதலாக சிறுவர்களாகவே இருக்கின்றனர்.

❋ **மனவடுக்கள் உளநலப் பாதிப்புகள் –** எல்லோரையும் பறிகொடுத்து விட்டோம். இனி என்ன இருக்குது வாழ்க்கையிலே என்ற விரக்தியும், வாழ்வதற்கே பிடிக்காத ஒரு போக்கும் இழப்புகளை சந்திக்கின்றவர்களில் உள்ளவர்களிலே இன்னும் ஆறாத துயரமாகவே இருக்கிறது.

## 2. பொருளாதாரக் கண்ணோட்டத்திலே:

❋ **சொத்தழிவுகள் –** மக்களின் வீட்டுப் பொருட்கள், உடுபுடவைகள், நகைகள், பணம், வாகனங்கள் என்பவையெல்லாம் இயற்கையின் சூறையாடலுக்கு இலக்காகியுள்ளன.

❋ **தொழில் வாழ்வாதாரங்கள் பாதிப்பு –** பல தொழிற்சாலைகளும், கடல் மீன்பிடிப் படகுகளும், உபகரணங்களும், எந்திரங்களும், வயல்களும், விளைச் சல்களும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

❋ **நன்னீர்க் கிணறுகள், வயல்தோட்ட நிலங்கள் வளமற்றுப்போனமை –** இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படுகின்ற சூழல் மாற்றங்களினால் பல நன்னீர்க்கிணறுகளும், ஊற்றுக்களும் நிலைமாறியுள்ளன. பல வளமுள்ள நிலங்கள் வளமற்றுக்காணப்படுகின்றன.

## 3. சமயக் கண்ணோட்டத்தில்:

❋ **ஏன்? எதற்கு? என்ற கேள்விகள் –** அப்பாவி மக்களையெல்லாம் தமக்கிரையாக்கிக் கொண்ட இந்த இயற்கை அனர்த்தங்கள் ஏன் நிகழ்கின்றன? கடவுள் என்ற ஒருவர் இருந் தால் இவற்றை ஏன் அனுமதித்தார்? கடவுள் அன்புள்ளவர் என்ற நம்பிக்கையை எங்கள் பெரியோர்கள் ஊட்டி வந்தார்கள். இன்று அது அர்த்தமற்றும் போய்விட்டது. எம்மை எல்லாம் அவர் கைவிட்டு விட்டாரே என்று கடவுள்மேல் பழி போட்டு அவரைக் கேள்வி கேட்டு தங்கள் உள்ளக் குமுறல்களைத் தணித்துக் கொள்ளும் மனிதர்கள் எத்தனை எத்தனை.

அப்பாவி மக்களையெல்லாம் தமக்கிரையாக்கிக் கொண்ட இந்த இயற்கை அனர்த்தங்கள் ஏன் நிகழ்கின்றன?

### ❋ உதவிகள் என்ற பெயரில் மனமாற்ற முயற்சிகளா?

பாதிப்புக்குள்ளான மக்களுக்கு உதவி செய்வதாக முன்வருகின்ற சில சமய ஸ்தாபனங்கள் இந்த தருணங்களை தமதாக்கி மக்களின் மனங்களை மாற்றி மனம் மாற்ற முயற்சி செய்தார்கள் என்று பத்திரிகைகளில் வாசிக்கின்றோம். இதனால் உண்மையாகவே பாரபட்சமின்றி அல்லது எதுவித உள்நோக்கமும் இன்றி சேவை செய்த சில சமய துறவிகளும், குருக்களும் இவ்வாறாகவே பலரின் அபிப்பிராயத்திற்குட்பட்டுள்ளனர்.

## 4. அரசியல் தளத்தினிலே:

**❋ நிதிப்பங்கீட்டில் குழறுபடிகள் –** மக்களுக்குப் பல தனியார் நிறுவனங்களினாலும் பல உதவி வழங்கும் நாடுகளினாலும், பல நல்ல உள்ளங்களினாலும் வழங்கப்பட்ட நிதியை எவ்வாறாக வழங்குவது என்பது பற்றி அரச தலையீடுகளிலே குழறுபடிகள் காணப்படுகின்றன.

## இயற்கை அனர்த்தம் பழைய ஏற்பாட்டின் பார்வையில்:

பழைய ஏற்பாட்டிலே ஆசிரியர், 'அனைத்துக்கும் ஊற்றும் உறைவிடமும் இறைவன்' என்று சித்தரித்துக் காட்ட விளைகின்றார். மக்கள் தம்மைவிட்டு விலகுகின்றபோது தண்டிக்கும் கடவுளாகவும், அவருடைய விருப்பத்தின்படி நடந்த போது, வழமான வாழ்வளிக்கும் கடவுளாகவும் சித்தரித்துக்காட்டப்பட்டுள்ளது. காரணம் தான் படைத்த படைப்பின்மீது முழு அதிகாரமும் உண்டு என்பதை புலப்படுத்துகின்றார். ஆதியாகமம் 6/5–8 "மண்ணுலுகில் மனிதரின் தீமையின் பொருட்டு ஆண்டவர் மனிதரை உருவாக்கியதற்காக மனம் வருந்தினார். நான் படைத்த மனிதரை மண்ணில் இருந்து அழித்தொழிப்பேன். மனிதர் முதல் கால்நடைகள், ஊர்வன, வானத்துப்பறவைகள் அனைத்தையும் அழிப்பேன்." கடவுள் மனம் நொந்தவராக, வெள்ளப்பெருக்கை அனுப்பி மக்களை அழிக்கின்றார். கடும்மழை பெய்து 40 இரவும், 40 பகலும் பூமியை நிரப்புகின்றது. அதாவது கடவுள் மட்டில் மனம் இறுகிக் காணப்படுகின்றவர்களை கடவுளாகிய 'யாவே' தனது சித்தப்படி நடக்காதவர்களைத் தண்டிக்கின்றார். இயற்கையினால் மனிதனுக்கும், ஏனைய உயிரினங்களுக்கும் இடம்பெறுகின்ற அழிவுகளைப் பழைய ஏற்பாடானது கடவுளால் வழங்கப்படுகின்ற தண்டனையின் விளைவாகவே காண்கின்றது.

இயேசு பழைய ஏற்பாட்டின் நிகழ்வுகளையும், இஸ்ராயேல் மக்கள் கொண்டிருந்த மனநிலையையும் தம்மிலே பூரணப்படுத்துபவராகக் காணப்படுகின்றார். இயேசு தமது தந்தையை ஓர் தண்டிக்கும் கடவுளாக மக்களுக்குப் போதிக்கவில்லை. மாறாக "அவர் அன்பாயிருக்கிறவர்", "உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல் நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள்" என்கிறார். ஆனால் இயேசு உலகமுடிவின் நிகழ்ச்சிகளைப் பற்றி கூறுகின்றபோது "அப்பொழுது நாட்டை எதிர்த்து நாடும், அரசை எதிர்த்து அரசும், பல இடங்களில் பஞ்சமும், நிலநடுக்கங்களும் ஏற்படும் (மத். 24/7). என்கிறார். புகழ் பெற்ற எழுத்தாளர்கள் யோசேபாஸ், மற்றும் செனேக்கா என்பவர்கள் இப்பொழுது மத்திய ஆசியா என்றழைக்கப்படுகின்ற இடத்திலே கிறிஸ்துவின் இறப்பை அண்டிய காலங்களிலே ஒரு பாரிய புவி நடுக்கம் ஏற்பட்டது என்கிறார்கள்.

> இயேசு தமது தந்தையை ஓர் தண்டிக்கும் கடவுளாக மக்களுக்குப் போதிக்கவில்லை. மாறாக "அவர் அன்பாயிருக்கிறவர்", "உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல் நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள்" என்கிறார்.

"அதேநேரத்தில் திருக்கோவிலின் திரை மேலிருந்து கீழ்வரை இரண்டாகக் கிழிந்தது, நிலம் நடுங்கியது; பாறைகள் பிளந்தன" (மத். 27/51).

"திடீரென ஒரு பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது சிறைக்கூடத்தின் அடித்தளமே அதிர்ந்தது" (அ.ப. 16/26). "திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது (மத். 28/2).

கடவுள் ஒவ்வொரு நிகழ்வினூடாகவும் ஒரு புதிய பாடத்தை மனிதர்களுக்கு கற்பிக்கின்றார். ஆனால் யாருமே கடவுள்தான் தண்டிக்கின்றார் என்றோ அல்லது அவர் தண்டிக்க மாட்டார் என்றோ கூறமுடியாது. காரணம் புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய நிரூபத்தில் (11/33), குறிப்பிடுவதுபோன்று, "கடவுளின் அருட்செல்வம் எத்தனை மிகுதியானது! அவருடைய ஞானமும் அறிவும் எத்துணை ஆழமானவை! அவருடைய தீர்ப்புகள் அறிவுக்கு எட்டாதவை! அவருடைய செயல்முறைகள் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவை".

> கடவுள் ஒவ்வொரு நிகழ்வினூடாகவும் ஒரு புதிய பாடத்தை மனிதர்களுக்கு கற்பிக்கின்றார்.

## இயற்கை அனர்த்தங்கள் சமயங்களின் பார்வையில்

**இந்து மதம் -**

இந்து மதம் கடவுளை இயற்கையிலேயே பெரிதும் அனுபவிக்கின்றதொன்றாகக் காணப்படுகின்றது. காற்றாக, நீராக. மரமாக, கல்லாக, நெருப்பாக இயற்கையின் பருப்பொருட்களுக்கு உருவம் கொடுத்து பரம்பொருள் காணப்படுகின்றார் என்று கூறுகின்றது. இந்து மதமானது இயற்கை அனர்த்தங்களின் தாக்கத்தைக் கடவுளின் கோபமாகவே கருதுகின்றது. கடவுளின் தூய்மைக்கு மனிதன் களங்கம் விளைவிக்க முற்படுகின்றான். இதனால் கடவுளே சித்தம் கொண்டு பல விஸ்பரூபங்கள் எடுத்து மனிதனைத் தண்டிக்க முற்படுகின்றார் என்று கூறுகின்றது.

**இஸ்லாம் மதம் -**

இஸ்லாம் மதத்தின் கொள்கையின்படி இயற்கையும், மனிதனைச் சூழ உள்ள அனைத்துமே அல்லாவினால் அவனது சிருஷ்டிகளின் தேவைகளுக்காக உண்டு பண்ணப்பட்டவையாகும். படைத்த அல்லாவை மறந்து மனிதன் தனது வக்கிர புத்தியின் பொருட்டு இஸ்லாம் மார்க்கத்தைத் தூக்கி எறிகின்றபோது அல்லாவின் கடைக்கண் பார்வையில் இருந்து மனிதன் அகன்றுவிடுகின்றான். அப்பொழுது இப்படியான "இபுலிசு" என்கின்ற சாத்தானின் சோதனைகள் பல்வேறு வடிவங்களிலே வந்து மனிதர்களைத் தாக்குகின்றது.

**பௌத்த மதம் -**

பௌத்தமதத்தின் சித்தாந்தத்தின்படி ஒரு 'ஈ' 'எறும்புக்கும்' தீங்கு விளைவிக்கக்கூடாது. "தர்மமார்க்கத்தைக் கடைப்பிடித்து முக்தி அடைந்து கொள்வதாகும்". "எவைகள் முடிவில்லாத மகிழ்ச்சியைத் தருகின்றன?" என்ற வினாவிற்கு புத்தபெருமான் விடையளிக்கின்றபோது "இயற்கையின் நியதியை மாற்றாமையும், எம்மைச் சூழவுள்ள சூழலின்தன்மையை குழப்பாமையும் அமைதி வழியில் சலனம் காண பச்சிளம் காடுகளை பராமரிப்பதும் ஒரு மனிதன் சமூகத்திற்கு செய்யும் தொண்டாகும் என்கின்றார்.

"இயற்கையின் நியதியை மாற்றாமையும், எம்மைச் சூழவுள்ள சூழலின்தன்மையை குழப்பாமையும் அமைதி வழியில் சலனம் காண பச்சிளம் காடுகளை பராமரிப்பதும் ஒரு மனிதன் சமூகத்திற்கு செய்யும் தொண்டாகும்"

## இறையியல் மாணவியாகிய எனது கருத்துக்கள்

ஒரு மனிதன் தன்னுடைய வாழ்நாளிலே எவ்வளவுதான் இன்பங்களையும் மகிழ்ச்சியையும் அனுபவித்தாலும் அவனுக்கென்று ஒரு துன்பம், பிரிவு வருகின்ற

போதுதான் தன்னுடைய இயலாமையை யும், ஒன்றுமில்லாமையையும் எண்ணுகின்றான். படைத்தவன் ஒருவன் இருப்பதாக உணருகின்றான். படைத்தவனை எண்ணி, நம்பி வாழ்ந்தவனுக்கு துன்பம் வந்ததும் "ஏன் என்னை வதைக்கிறாய் இறைவா?" என்கின்றான். பலர் அந்த முதல் பரம்பொருளைக் கடிந்து கொள்கின்றார்கள். இதுதான் இந்த இயற்கை அனர்த்தங்களினால் ஏற்பட்ட விளைவாக இருக்கின்றது. கடவுள் ஒரு வார்த்தை சொல்லவே அனைத்தும் உண்டாயின. அவர் அனைத்தையும் அறிந்திருக்கிறார். அவர் தம்மக்கள் படுகின்ற துன்பங்களைக் கண்டு பார்த்துக் கொண்டிருக்கிறவர் அல்ல. மாறாக எம்மைவிட அதிகமாக எம்மில் அக்கறை கொண்டிருக்கிறார். ஆனால் எம்முடைய சுதந்திரத்திலே கைவைக்க அவர் விரும்புவதில்லை. மனிதன் மனிதனை அழிக்க தினமும் முனைந்து பல அணு ஆயுதங்களையும், நவீன உபகரணங்களையும் கண்டுபிடித்து வருகின்றான் தன்னை வளப்படுத்த கொடுக்கப்பட்ட அறிவைக் கொண்டு தன்னையே அழித்துக் கொள்கிறான். அவனது இந்த அடிமைத்தனங்களினால் இயற்கை சீற்றம் கொள்கிறது. காட்டை அழிக்கின்றான். மண்ணை அளவில்லாமல் அகழ்ந்தெடுக்கின்றான். கடல் நீரை தொழிற்சாலைக் கழிவுகளைக் கொண்டு மாசுபடுத்துகின்றான். அணு ஆயுதங்களை சமுத்திரங்களிலும், பாலைவனங்களிலும் பரிசோதித்துப் பார்க்கிறான். ஏவுகணைகளைப் பரீட்சிக்கின்றான். இவ்வாறான செயற்பாடுகளினால் புவியானது தினமும் வெப்பமடைகின்றது. நிலக்கீழ்த் தகடுகள் தங்களது இருப்பிடங்களை விட்டு விலக முற்படுகின்றன. கண்டத்தகடுகள் பிரிந்து செல்வதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இதன் விளைவாக பாரிய வெள்ளப் பெருக்குகள், எரிமலை வெடிப்புக்கள் பனிமலை உருகுதல், காட்டுத்தீ பரவுதல் போன்ற இயற்கை அழிவுகள் சரளமாக இடம்பெற்று பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர்களைப் பறித்துச் செல்கின்றது. இவற்றிற்கெல்லாம் காரணவாதிகள் மனிதர்கள்தான். ஆனால் மனிதன் தன்னைப் படைத்த இறைவனைக் கடிந்து கொள்கிறான். பழியை இறைவன்

> ஒரு மனிதன் தன்னுடைய வாழ்நாளிலே எவ்வளவுதான் இன்பங்களையும் மகிழ்ச்சியையும் அனுபவித்தாலும் அவனுக்கென்று ஒரு துன்பம், பிரிவு வருகின்ற போதுதான் தன்னுடைய இயலாமையையும், ஒன்று மில்லாமையையும் எண்ணுகின்றான்.

> இயற்கை அழிவுகள் சரளமாக இடம்பெற்று பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர்களைப் பறித்துச் செல்கின்றது. இவற்றிற்கெல்லாம் காரணவாதிகள் மனிதர்கள்தான்.

மேல் போட்டுவிடுகிறான். இறைவா உனக்குக் கண் இல்லையா? காது இல்லையா? என்று கேள்விக்கு மேல் கேள்வியை எழுப்பி குழப்ப நிலையை அடைகின்றான்.

ஆனால் இறைவன் பரிவுள்ளவர், அன்புள்ளவர், பொறுமையுள்ளவர். இந்த இயற்கை அழிவுகளைக் கொண்டு, கடின உள்ளங்களையும் கரையச் செய்கின்றார். மனிதம் என்றால் என்னவென்று உணரச் செய்கின்றார். பாதிக்கப்பட்டவர்களும், இறந்தவர்களும் பாவிகளும் அல்ல, புனிதர்களும் அல்ல. இச்சம்பவங்கள் வாழுகின்றவர்களுக்கு ஒரு விழிப்புணர்வைக் கொடுக்கின்றது. எல்லாவற்றிற்கும் அப்பால் ஒரு சக்தி இருக்கின்றது. “நான்” என்று வாழுகின்ற மனிதனுக்கு, இந்த சக்தியை உணரச் செய்கின்றார். ஆகவே மனிதர்களை மனிதர்களாக மதித்து நடப்போம். இயற்கையைப் பேணிப் பாதுகாப்போம். இறைவனிலே தங்கி அவர் சித்தத்திற்கு எம்மைக் கையளிப்போம்.

பாதிக்கப்பட்டவர்களும், இறந்தவர்களும் பாவிகளும் அல்ல, புனிதர்களும் அல்ல. இச்சம்பவங்கள் வாழுகின்றவர்களுக்கு ஒரு விழிப்புணர்வைக் கொடுக்கின்றது.

## அன்பான வாசக நெஞ்சங்களே!

*எங்கே உங்கள் விமர்சனங்கள்*
*காலம் தாமதியாது எமக்கு எழுதி*
*அனுப்புங்கள்*
*இறையியல்சார்பான*
*தெளிவின்மைகள் உங்களிற்கு*
*உண்டா? எழுதி அனுப்புங்கள்*
*விடைகள் உங்களிற்குத்*
*தெரியப்படுத்தப்படும்.*

*நிர்வாகக் குழு*



# நற்கருணை ஆண்டு: குருக்கள், பொதுநிலையினர்

அருட்திரு. இ. தயாபரன்

## முன்னுரை

காலத்தின் தேவையை அறிந்த தாய்த்திருச்சபை கடந்த திருவழிபாட்டு ஆண்டை நற்கருணை ஆண்டாக அறிவித்து, நற்கருணையின் மறையுண்மைகளை சிந்திக்க, தியானிக்க, விசுவசிக்க, வாழ்வாக்க குருக்கள், துறவியர், பொதுநிலை விசுவாசிகளை அழைத்து நின்றது. நற்கருணையிலிருந்து திருச்சபை தன் வாழ்வைப் பெறுகிறது. அதன் ஊற்றும் உச்சியுமாக இருப்பதும் நற்கருணை.

"இதோ உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களோடு இருக்கின்றேன்" (மத். 28:20) என இயேசு தமது தனிப்பட்ட ஆழமான உடனிருப்பை நற்கருணையில் வெளிப்படுத்துகின்றார். இந்த தூய நற்கருணையை கொண்டாடுகின்ற, உட்கொள்கின்ற, குருக்கள், பொதுநிலை விசுவாசிகள் ஓர் நற்கருணை சமூகம். இச்சமூகம் நற்கருணையின் சாட்சிகளாக நற்கருணை வெளிப்படுத்து

"இதோ உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களோடு இருக்கின்றேன்" (மத். 28:20) என இயேசு தமது தனிப்பட்ட ஆழமான உடனிருப்பை நற்கருணையில் வெளிப்படுத்துகின்றார்.

கின்ற தியாக வாழ்வை, அன்பு வாழ்வை, ஒன்றித்த வாழ்வை வாழும் இறையரசுச் சமூகமாக இருப்பதே இறை அழைப்பு. இவ்வழைப்பை உணர நற்கருணை ஆண்டில் பல செயற்பாடுகள் திருச்சபையில் மேற்கொள்ளப்பட்டு விசுவாசிகளின் நற்கருணை வாழ்வு புதுப்பிக்கப்பட்டது.

## நற்கருணை ஆண்டின் எதிர்பார்ப்பு

கத்தோலிக்க திருச்சபை ஒவ்வொரு திருவழிபாட்டு ஆண்டையும் இறை மக்களின் விசுவாச புதுப்பித்தலை மையப்படுத்தி, காலத்தின் தேவைக்கேற்ப ஒவ்வொரு மறையுண்மைகளுக்கென அர்ப்பணித்து அவ்வாண்டில் அம்மறையுண்மைபற்றி ஆழமாக சிந்தித்து, விசுவசித்து வாழ இறைமக்களைத் தூண்டுகின்றது.

இறைமக்கள் மத்தியில் காலத்தின் பல்வேறு மாற்றங்களினால் குறைந்து போகின்ற நற்கருணை விசுவாசத்தை, பக்தியை, வாழ்வை கண்டுணர்ந்த தாய் திருச்சபையின் மறைந்த திருத்தந்தை இரண்டாம் யோன் பவுல் கடந்த ஆண்டை நற்கருணை ஆண்டாக பிரகடனப்படுத்தினார். இவ்வாண்டில் நற்கருணையில் பொதிந்துள்ள மறையுண்மைகளை ஆழமாக அறிந்து, நற்கருணை விசுவாசத்தில் உறுதிபெறவும், நற்கருணை வெளிப்படுத்துகின்ற வாழ்வை வாழ்ந்து இறையரசுக் குரியவர்களாக இறைமக்கள் வாழவேண்டும் என்பதே திருச்சபையின் எதிர்பார்ப்பு.

> கிறிஸ்தவ வாழ்வின் மையமும், சிகரமும் ஊற்றுமாக இருப்பது நற்கருணை என்பதை திருநிலையினரும்,

கிறிஸ்தவ வாழ்வின் மையமும், சிகரமும் ஊற்றுமாக இருப்பது நற்கருணை என்பதை திருநிலையினரும், பொதுநிலையினரும் தம் வாழ்வில் கண்டுணர்ந்து கிறிஸ்துவின் மெய்யான பிரசன்னத்திற்கு சாட்சிகளாகத் திகழ வேண்டியதை வலியுறுத்தி திருமடல்களும் தாய் திருச்சபையால் வெளியிடப்பட்டது. (LG11)

## நற்கருணையும் குருத்துவமும்

### 1. இயேசுவின் குருத்துவம்

இயேசுவின் குருத்துவம் தனித்துவமானது. அவர் ஓர் உன்னத குரு (High Priest) "இவரோ என்றென்றும் நிலைத்திருப்பதால் மாறாத குருத்துவப் பணியை பெற்றுள்ளார்" (எபி. 7:24).

இயேசு தம்முடைய பகிரங்கப் பணிவாழ்வில் தம்மை ஒரு குருவாக அழைக் கவோ, அடையாளப்படுத்தவோ இல்லை. அக்காலத்தில் இருந்த யூதக் குருக்கள் மற்றும் ஏனைய சமய குருக்களைப் போன்று வெறும் சடங்குகளையும், சம்பிரதாய பலிகளையும் நிறைவேற்றுகின்ற ஒரு சாதாரண குருவாக தம்மையும் எண்ணிவிடு வார்கள் என்பதால் தம்மை அவர் குருவாக அடையாளப்படுத்தவில்லை.

இயேசுவின் உன்னதமான, தனித்துவமான குருத்துவம் இறுதி இராவுணவின் போது அப்பத் தையும் இரசத்தையும் எடுத்து இது என் உடல், இது என் இரத்தம் என அடையாளப்படுத்தி மறுநாள் கல்வாரியில் தம் உயிரையே சிலுவையில் பலியாக்கிய மீட்பு நிகழ்வில் வெளிப்பட்டது. இயேசு வெறுமனே பலியிடுபவர் மட்டுமல்ல அவரே பலிப்பொருளுமாவார். தம்மையே பலியாக்கி மனுக்குலத்தை புனிதப்படுத்தி மீட்டுக்கொண்ட தலைமைக்குரு அவரே.

> இயேசு வெறுமனே பலியிடுபவர் மட்டுமல்ல அவரே பலிப் பொருளுமாவார். தம்மையே பலியாக்கி மனுக்குலத்தை புனிதப்படுத்தி மீட்டுக்கொண்ட தலைமைக்குரு அவரே.

## 2. நற்கருணை குருத்துவப் பணியின் மையம்

"ஆண்டவராகிய இயேசு காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இரவில்" (1 கொரி. 11:23) நற்கருணையை ஏற்படுத்தி அதை தம் நினைவாகச் செய்ய, தமது குருத் துவப் பணியை தொடர்ந்தாற்ற குருத்துவத்தை ஏற்படுத்தினார். இதனால் நற்கரு ணையும் குருத்துவமும் பிரிக்கமுடியாத, ஒன்றோடு ஒன்று சார்ந்துநிற்கின்ற அருட் சாதனம் என்பது வெளிப்படுத்தப்படுகின்றது. இயேசு தனது உடலையும் இரத்தத் தையும் பலியாக்கி தந்தையாகிய இறைவனுக்கு ஏற்புடையவராகி முழுமனித குலத்தை யும் மீட்டுக் கொண்டார். திருநிலைப்படுத்தப்பட்ட குரு தனது நாளாந்த நற்கருணைக் கொண்டாட்டத்தினூடாக இம்மறையுண்மையை நினைவுகூர்ந்து, பிரசன்னப்படுத்து கின்றார். இதனால் நற்கருணைக் கொண்டாட்டம் குருவின் நாளாந்த வாழ்வினதும், அவரது அழைப்பினதும், பணியினதும் ஊற்றும், மையமும் சிகரமுமாக உள்ளது.

மேலும் திருநிலைப்படுத்தப்பட்ட குரு "மறு கிறிஸ்துவாக நின்று நற்கரு ணையை நிறைவேற்றுகின்றார். எல்லா மக்களின் பெயராலும் கடவுளுக்கு அதை ஒப்புக்கொடுக்கின்றார்" 'மறுகிறிஸ்துவாக' என்றசொல் 'கிறிஸ்துவின் பெயரால்' அல்லது 'கிறிஸ்துவுக்குப் பதிலாக' ஒப்புக்கொடுக்கின்றார் என்பதை விட ஆழமான பொருள் கொண்டது. மறு அல்லது பதிலாக என்பது குறிப்பிடத்தகுந்த அருட்சாதன

முறையில் என்றும் வாழும் தலைமைக் குருவோடு அடையாள நிலையில் பொருந்து வதாகும் என திருச்சபையும் நற்கருணையும் (எண். 30) என்ற சுற்றுமடல் கூறுகிறது.

குருக்கள் தமது அழைப்பின் மேன்மையை தினமும் உணரவும், அதில் பிரமாணிக்கமாய் இருக்க வலுவையும், மன உறுதியையும் ஆன்மபலத்தையும் இப்பலியில் தான் இறை அழைத்தலுக்கான செபம் கிறிஸ்துவின் செபத்தோடு மிக நெருக்கமான முறையில் இணைக்கப்பட்டுள்ளது.

இன்றைய உலகின் சமூக, கலாச்சார சூழ்நிலைகளின் மாற்றங்களினால் குருக்கள் பல்வேறு வகையான மேய்ப்புப்பணிகளில் ஈடுபட வேண்டிய தேவை உண்டு. ஆனால் இத்தகைய பிறரன்பு, அருள்பணி பண்பு பணிகளின் மையமாக, ஊற்றாக இருக்கவேண்டியது நற்கருணைப் பலி. நற்கருணை பலியிலிருந்துதான் திருப்பணியாளர்களின் இந்த அருள்பணியன்பு பெருக்கெடுத்தோடுகின்றது. ஆகவே நற்கருணைப் பலி திருப்பணியாளருடைய வாழ்வின் முழுமையாகவும் அடிப்படையாக வும் விளங்குகின்றது

## நற்கருணையும் பொதுநிலை விசுவாசிகளும்

> தொடர்ந்து வரும் சிலுவைப் பலியின் வழியாகவும் நற்கருணையில் கிறிஸ்துவின் உடல் மற்றும் இரத்தத்தில் பங்கெடுப்பதன் வழியாகவும் திருச்சபை தன் பணியை தொடர்வதற்கு தேவையான ஆன்மீக ஆற்றலை பெறுகிறது.

இறைமக்களின், விசுவாசிகளின் கூட்டமே திருச சபை. ஒவ்வொரு விசுவாசியும் திருமுழுக்கினூடாக கிறிஸ்துவின் குருத்துவத்தில் உடன் பணியாளர். திருச்சபையின் பணி கிறிஸ்துவின் பணியைத் தொடர்வது. தொடர்ந்து வரும் சிலுவைப் பலியின் வழியாகவும் நற்கருணையில் கிறிஸ்துவின் உடல் மற்றும் இரத்தத்தில் பங்கெடுப்பதன் வழியாகவும் திருச்சபை தன் பணியை தொடர்வதற்கு தேவை யான ஆன்மீக ஆற்றலை பெறுகிறது. இதனால் திருச்சபையின் வாழ்வின், பணியின் ஊற்றும் உச்சியு மாக நற்கருணை உள்ளது. எனவே பொதுநிலை விசுவாசிகளின் வாழ்வின் மையமும் விசுவாச வளர்ச்சியின் ஊற்றுமாக இருப்பது நற்கருணை.

பொதுநிலை விசுவாசிகள் இறைவனிடமிருந்து பெறுகின்ற பல சிறப்பான கொடைகளுள் ஒன்றல்ல நற்கருணை. மாறாக அது ஓர் ஈடுஇணையற்ற பெறக்கூடிய மிகப்பெரிய சிறந்த கொடையாகும். இக்கொடை இறைமக்கள் சமூகத்தில் கிறிஸ்துவின்

மீட்பளிக்கும் உடனிருப்பாகவும், அதன் ஆன்ம உணவாகவும் இருந்து விசுவாசிகளின் விண்ணக விருந்தின் முன் சுவையாக உள்ளது. "இதை வாங்கி உண்ணுங்கள்" "அனைவரும் இதை பருகுங்கள்" என இயேசு கூறியதன்மூலம் உலக மானிடர் அனைவரும் நற்கருணையில் பங்கெடுக்க அழைக்கப்பட்டுள்ளனர்; நற்கருணைப் பலியில் எல்லோரும் உடன் பங்காளிகள்.

திருமுழுக்கின் வழியாக கிறிஸ்துவோடு ஏற்படுகின்ற ஒன்றிணைவு, நற்கரு ணைப் பலியில் பங்கு கொள்வதன் வழியாக இடைவிடாது புதுப்பிக்கப்படுகிறது. உறுதிப்படுத்தப்படுகிறது. இதில் விசுவாசிகள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவை பெற்றுக் கொள்கின்றனர் என்பது மட்டுமல்ல கிறிஸ்துவே ஒவ்வொருவரையும் ஏற்றுக்கொள் கின்றார் என்றும் கூட சொல்லலாம். "நான் உங்களோடு இணைந்திருப்பதுபோல நீங்களும் என்னோடு இணைந்து இருக்கள்" (யோவா. 15:4) என்பதற்கேற்ப நற் கருணையில் கொள்ளும் பங்கேற்பு, மிகச்சிறந்த முறையில் கிறிஸ்துவும் அவரைப் பின்பற்றும் அனைவரும் ஒருவரோடு ஒருவர் இணைந்திருக்கும், ஒன்றித்த உறவு கொள்ளும் நிலையை உருவாக்குகின்றது. ஏனெனில் "நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில் தான் பங்கு கொள்கிறோம்" (1 கொரி. 10:16–17)

ஆதிக்கிறிஸ்தவ சமூகம் அப்பம் பிடுவதில் உறுதியாய் நிலைத்திருந்து (தி.ப. 4:42) நற்கருணையை வாழ்வாக்கி விசவாசத்தின் சாட்சிகளாயினர். அவ்வாறே பொதுநிலையினருடைய வாழ்வும் நற்கருணை வாழ்வாக, நற்கருணை வெளிப் படுத்துகின்ற அன்பு, தியாகம், மன்னிப்பு, சகோதரத்துவம் ஒன்றிப்பு. பகிர்வு போன்ற உயர் பண்புகளை வாழுகின்றவர்களாக இருக்கவேண்டும். இவ்வாழ்வு வாழ நற் கருணை விருந்தில் அடிக்கடி பயனுள்ள வகையில் தகுந்த மனநிலையோடு பங்கேற்க வேண்டும். "ஒவ்வொருவரும் தம்மையே சோதித்து அறிந்த பின்பே இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருகவேண்டும்" (1 கொரி. 11:28).

நற்கருணைக் கொண்டாட்டத்திற்காக கூடிவருகின்ற திருக்கூட்டம் உண்மை யிலேயே ஒரு நற்கருணை சமூகம். அதன் தலைவராக குரு பலியை தலைமை தாங்கினாலும் பொதுநிலையினரும் தமக்குரிய நிலையில் தமக்குரிய பங்கை ஆர்வத் தோடு செய்யக் கடமைப்பட்டவர்கள். "நம்பிக்கை கொண்டோர் தம் அரசத்திருப்பணி நிலையால் நற்கருணைப்பலியை ஒன்றித்து ஒப்புக்கொடுக்கின்றனர்" என 2ம் வத். சங்க ஏடு, திருச்சபை பற்றிய கோட்பாடு, இல. 10 கூறுகிறது.

## நற்கருணை ஆண்டில் குருக்கள்

குருக்கள் தமது குருத்துவத்தின் ஊற்றாகிய நற்கருணையில் பொதிந்துள்ள ஆழமான மறையுண்மைகளை மேலும் அறியவும், அதில் உறுதியான நம்பிக்கை கொண்டு, தினமும் ஒப்புக்கொடுக்கின்ற நற்கருணைப்பலியை பக்தியாகவும், பயனுள்ள விதத்திலும் கொண்டாடி அதை வாழ்வாக்க தூண்டிய காலம் நற்கருணை ஆண்டு எனலாம். இதனை ஊக்கப்படுத்த திருத்தந்தை 2ம் யோவான் பவுல் எழுதிய 'திருச்சபையும் நற்கருணையும்', என்ற சுற்றுமடல், பல இறையியலாளர்களின் கருத்துக்கள் என்பன வெளியிடப்பட்டன. உலகளாவிய திருச்சபையிலும், தளத்திருச்சபைகளிலும் மகாநாடுகள் கருத்தரங்குகள், நற்கருணை ஒன்றுகூடல் வழிபாடுகள் மேற்கொள்ளப் பட்டன.

குரு நற்கருணையை தலைமைதாங்குவதும் அதன் காவலராக இருப்பதும் மட்டுமல்ல நற்கருணை அறிவை, விசுவாசத்தை, பக்தியை விசுவாசிகளுக்கு புகட்டுவதும் அவரது கடமை. இதனை முன்னிட்டு குருக்கள் இவ்வாண்டில் தமது பணித்தளங்களில் பல சிறப்பான செயற்திட்டங்களை முன்னெடுத்தனர். தமது மறையுரைகளிலும், திருவிழா நவநாட்காலங்களிலும் நற்கருணை பற்றிய மறை அறிவை கற்பித்தனர். பல கருத்தரங்குகள் நற்கருணை ஒன்றுகூடல்களை நடாத்தினர். விசுவாசத்தை அதிகரிக்க அடிக்கடி நற்கருணை சந்திப்புக்கள், ஆராதனைகள், பவனிகள் போன்றவற்றை மேற்கொண்டனர்.

நற்கருணை ஆண்டானது குருக்கள் தமது அழைப்பை, அர்ப்பணத்தை நற்கருணை பலிவாழ்வை, பணிவாழ்வை புதுப்பித்து வாழ இறைவனால் தரப்பட்ட காலம் எனலாம்.

## நற்கருணை ஆண்டில் பொது நிலை விசுவாசிகள்

உலகையும் அதன் ஆடம்பரத்தையும் மையப்படுத்திய மனித வாழ்வினால், பொதுநிலை விசுவாசிகள் மத்தியில் நற்கருணை மீதுள்ள விசுவாசமும், பக்தியும் குறைந்ததோடு, நற்கருணை விசுவாசத்திற்கு எதிராக பல தப்பான கருத்துக்களும் பல அமைப்புக்களால் பரவவிடப்பட்டன. இத்தகைய தீமையில் இருந்து இறை மக்களை காத்து நற்கருணைபற்றிய மறை அறிவிலும், விசுவாசத்திலும் வாழ்விலும் ஊக்கப்படுத்த பல செயற்பாடுகள் நற்கருணை ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

நற்கருணை அறிவில் முதிர்ச்சிபெற நற்கருணை மறையுண்மைகள் அடங்கிய ஞாயிறு, நவநாள் மறையுரைகள், வயது வேறுபாட்டிற்கு ஏற்ப கருத்தரங்குகள் ஒன்றுகூடல்கள், மகாநாடுகள், கண்காட்சிகள், நற்கருணை புதுமைகள் அடங்கிய வீடியோ படக்காட்சிகள், வெளியீடுகள் பயனுள்ள முறையில் மேற்கொள்ளப்பட்டன. நற்கருணை விசுவாசத்தை பக்தியை ஊக்கப்படுத்த, அதை வெளிப்படுத்தி சாட்சியம் பகர, நற்கருணை சந்திப்புக்கள் ஆராதனைகள் பவனிகள் நடாத்தப்பட்டன. இவை அனைத்தும் இறைமக்களின் நன்றியின் அடையாளமாகவும், அன்பின் வெளிப் பாடாகவும், ஆண்டவரின் உடனிருப்பை அறிந்து கொள்வதாகவும் அமைந்தன.

மேலும் இவ்வாண்டில் நற்கருணைப்பலியின் புனிதத்துவம், அதன் பங்கேற்பு, குடும்பத்தில், சமூகத்தில் வாழவேண்டிய நற்கருணை வாழ்வு பற்றியதன் முக்கியத்து வத்தை திருச்சபை வலியுறுத்தியது. இவ்வாறு பொதுநிலை விசுவாசிகளும் நற்கருணை விசவாச வாழ்வை புதுப்பிக்க தரப்பட்ட காலம் நற்கருணை ஆண்டு.

## முடிவுரை

நற்கருணையின் மறையுண்மைகளை அறிந்து, உணர்ந்து வாழ தரப்பட்ட ஆண்டிலே பல்வேறுபட்ட செயற்பாடுகள் குருக்கள், பொதுநிலை விசுவாசிகளுக்கென மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும் நடைபெற்ற இயற்கை அனர்த்தங்களாலும், புறசூழ் நிலைகளாலும் அவ்வாண்டை முழுமையாக பயன்படுத்தமுடியவில்லை. இதனால் சில பிரதேச திருச்சபைகள் இவ்வாண்டையும் நற்கருணையை மையப்படுத்தியுள்ளது. எமது யாழ். திருச்சபையும் இவ்வாண்டை நற்கருணையை மையப்படுத்திய ஆண்டாக்க விரும்புகிறது.

எனவே தொடர்ந்தும் எமது நற்கருணை அறிவை விசுவாசத்தை பக்தியை வாழ்வை புதுப்பிக்க அழைக்கப்பட்டுள்ளோம். இதற்காக இறைவன் தருகின்ற சந் தர்ப்பத்தை முழுமையாக பயன்படுத்துவதன் மூலம் உயிர்வாழும் நற்கருணை சமூக மாக திகழமுடியும் "என்னை உண்போர் என்னால் வாழ்வர்" (யோவான் 6:57).

## துணைநின்ற நூல்கள்


1. திருவிவிலியம்
2. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்
3. சுற்றுமடல் 'திருச்சபையும் நற்கருணையும்'
4. "மீட்பின் அருள்சாதனம்" (திருப்பேராயத்தின் அறிவுரை)

# திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுலின் சிந்தனைகள்:



பெண்கள், மரியாள், நற்கருணை









அருட்திரு. பே. அ. அருள்தாசன்

## முன்னுரை

திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் என்றதும், அனேக கத்தோலிக்கரின் மனதில் நற்கருணை பற்றிய சிந்தனை எழலாம். ஏனெனில், இவர் எழுதிய பதினான்கு திருமுகங்களிலும், அறுபத்தெட்டு அப்போஸ்தலிக்க கொள்கைத் திரட்டுக்களிலும் பிரதானமாகவும் துல்லியமாகத் துலங்குபவையும் மரியாவும், நற்கருணையுமே ஆகும். அத்தோடு, திருச்சபையை நீண்ட இருபத்தியேழு ஆண்டுகள் திருத்தந்தையாகக் கண்காணித்து, தம் கண்காணிப்பின் நிறைவின் ஆண்டில் தாம் இவ்வுலகப் பயணத்தை நிறைவு செய்கிற ஆண்டை "நற்கருணையின் ஆண்டாக" பிரகடனம் செய்தார். 2003ம் ஆண்டில் "நற்கருணையின் திருச்சபை" (Ecclesia de Eucharistia) என்ற நற்கருணையின் சிறப்பை வெளிப்படுத்தும் சுற்றுமடலையும் வெளியிட்டார்.

2005ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் உரோமையில் இடம்பெற்ற 11ம் ஆயர் பேரவையை (Synod of Bishops) ஒழுங்கு செய்து, அதற்கான கருப்பொருளாகிய ("The Eucharist is the source of life") "நற்கருணையே வாழ்வின் ஊற்று" என்பதை திருத்தந்தை அவர்களே தெரிவு செய்தார்.

திருத்தந்தை 2ம் யோவான் பவுல் அவர்கள் கிறிஸ்தவப் பெண்களுக்கு மேல் வரிச்சட்டமாக விளங்கும் கன்னி மரியா

வின் மட்டில் அளவுகடந்த பக்தி கொண்டவர். 1981ம் ஆண்டு மே மாதம் 13ம் நாள், வத்திக்கான் நகரின் தூய பேதுரு சதுக்கத்திலே திருத்தந்தை அவர்கள் சுடப்பட்டுப் படுகாயமடைந்து, உயிர்பிழைத்தார். அன்றைய நாள் தூய கன்னி மரியா பத்திமா பதியில் முதன் முறையாகக் காட்சியளித்த நினைவுநாளாக இருந்தமையாலேயே தாம் காப்பாற்றப்பட்டதாகத் திருத்தந்தை கூறியுள்ளார். மேலும் தம்முடைய "நற் கருணையின் திருச்சபை" என்ற சுற்றுமடலில் "மரியாள் நற்கருணையின் பெண்மணி" என்றும் அவள் எவ்வாறு நற்கருணை வாழ்வை வாழ்ந்தாள் என்றும் விளக்குகிறார். அவ்வாறே எல்லாக் கிறிஸ்தவப் பெண்களும் அன்னை வழியைப் பின்பற்றி வாழ வேண்டுமென்பதே திருத்தந்தையின் ஆவல் என நாம் கருதலாம்.

## I. யோவான் பவுலின் வாழ்வும் பணியும்

திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் ஒரு உலக சமாதானத் தூதுவர் என்றால் அதை எவரும் மறுக்கமுடியாது. இருபத்தியேழு ஆண்டுகள் அகில உலக கத்தோலிக்கத் திருச்சபையின் பிரமாணிக்கமான கண்காணிப்பாளனாக நல் ஆயனாக வழிநடத்திய திருத்தந்தை தன் 84வது அகவையிலே இவ்வுலக வாழ்க்கைப் பயணத்தை முடித்தபோது முழு உலகமுமே தம் அனுதாபத்தை மறைந்த பாப்பரசருக்குத் தெரிவித்தது. இதற்குக் காரணம் இவர் சமாதானத்தின் தூதுவராக உரோமையை விட்டுக் கூடுதலான பயணங் களை மேற்கொண்ட முதலாவது பாப்பானவராக விளங் கியுள்ளார். தன் நம்பிக்கைக்கேற்ப நற்கருணை வாழ்வை வாழ்ந்து நற்கருணை வாழ்வின் சாட்சியாக உலக சமா தானத்திற்காக உழைத்தார். நற்கருணை அடையாளப் படுத்தும் மன்னிப்பிற்குத் தன் வாழ்வால் உருக்கொடுத் தார்; எவ்வாறெனில் திருத்தந்தை வத்திக்கான் நகரின் தூய பேதுரு சதுக்கத்தில் 1981ம் ஆண்டு மே மாதம் 13ம் நாள் தம்மைத் துப்பாக்கியால் சுட்ட துருக்கியைச் சேர்ந்த முகமது அலி அக் என்ற துருக்கிய பயங்கர மனிதனை மன்னித்து சிறையில் அவரைக் காணச் சென்று அரவணைத்தார். யூபிலி ஆண்டில் எந்தத் திருத்தந்தையும் வரலாற்றில் செய்திராத ஒரு மாபெரும் செயலாக நற்செய்தி விழுமியத்திற்கு செயல்வடிவம் கொடுத்து வரலாற்றில் திருச்சபை செய்த எல்லாத் தவறுகளுக்காகவும் உலகத் திருச்சபை சார்பில் பகிரங்கமாக மன்னிப்புக் கோரினார். இது ஏனைய சமய உலகத் தலைவர்களை வியப்பில் ஆழ்த்தியது.

தன் நம்பிக்கைக்கேற்ப நற்கருணை வாழ்வை வாழ்ந்து நற்கருணை வாழ்வின் சாட்சியாக உலக சமாதானத்திற்காக உழைத்தார்.

ஒடுக்கப்பட்டவர்களுக்கு உரிமை வாழ்வை வழங்கவும் (லூக். 4:18) என்ற இயேசுவின் வார்த்தையைத் தாரக மந்திரமாய்க் கொண்டு நற்கருணை விழுமியத்திற் கொப்ப ஒடுக்கப்பட்டவர்கள் சார்பாய் குரல் எழுப்பினார். 2003ல் ஈராக்கை அமெரிக்காவும் பிரித்தானியாவும் தாக்கிய போது அரபு நாடுகள் உட்பட ஐக்கிய நாடுகள் சபையும் மௌனமாய் நின்றபோது அமெரிக்காவின் தவற்றைத் தனியே நின்று சுட்டிக்காட்டிக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார்.

யூபிலி ஆண்டை முன்னிட்டு "ஆசியத் திருச்சபை" என்ற சுற்றுமடலை 1999ல் இந்தியத் திருநாட்டின் டில்லி நகரில் வெளியிட்டார். அதில் ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டுமென எல்லா நாடுகளையும் தாம் கேட்டுக் கொள்வ தாகக் குறிப்பிட்டார். நற்கருணை வாழ்வை வாழ்ந்த பாப்பரசர், ஒன்றிப்பை ஏற்படுத்தும் முகமாக திருச்சபை வரலாற்றிலே முதன்முதலாக பாப்பரசரின் நிலையிலிருந்து யூத மதத்தலைமைக்குருவைச் சந்தித்துச் சமரசம் செய்தவர். 2001ம் ஆண்டில் திருத் தந்தை பழமையான 8ம் நூற்றாண்டிற்குரிய "உமயத்" பள்ளி வாசலைத் தரிசித்து அங்கு இஸ்லாமியத் தலைவரோடு இணைந்து இறைவேண்டல் செய்தார். இவ்வாறு இஸ்லாமியருடன் நல்லுறவை ஏற்படுத்த முனைப்பாகச் செயற்பட்ட பெருமை திருத்தந்தை யையே சாரும். ரஷ்ய, கிரேக்க ஒத்தடொக்ஸ் (Orthodox) திருச்சபையினரைச் சந்தித்து உறவுப்பாலம் அமைத்தவர்.

திருத்தந்தை அன்னை மரியாவின் மேல் அளவு கடந்த அன்பும், பக்தியும் கொண்டவர். "நான் எல்லாவற்றையும் அன்னை மரியின் கையில் ஒப்படைக்கிறேன், தாய்க்குரிய அன்புடன் அவள் தன் அன்பு மகன் யேசுவிடம் பரிந்து பேசுவாள்" என்று 2002ம் ஆண்டு ஒக்ரோபரில் திருச்செபமாலையின் ஆண்டை ஆரம்பித்து வைத்த போது கூறினார்.

## முடிவாக:

திருத்தந்தையின் ஆயத்துவப்பணி திருச்சபையில் தனிச் சிறப்புப் பெற்றமைக்கு அவர் நற்கருணை ஆண்டவரிடனும், அன்னை மரியாவோடும் கொண்டிருந்த அளவு கடந்த பக்திப் பற்றுதலே காரணமாகும். திருச்சபைக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்தமைக்கு "பெண்களுள் ஆசிபெற்ற" மரியாவை அவர் சிறந்த முன்மாதிரியாகக் கொண்டு நற்கருணை வாழ்வை வாழ்ந்துள்ளார் என்பதே சாலப் பொருத்தமாகும்.

திருத்தந்தையின் ஆயத்துவப்பணி திருச்ச்பையில் தனிச் சிறப்புப் பெற்றமைக்கு அவர் நற்கருணை ஆண்டவரிடனும், அன்னை மரியாவோடும் கொண்டிருந்த அளவு கடந்த பக்திப் பற்றுதலே காரணமாகும்.

## 2. பெண்களின் உரிமைகள் பேணப்படவேண்டுமென்ற திருத்தந்தையின் அழைப்பு

### 2.1. "ஆசியத் திருச்சபை" (Ecclesia in Asia) என்ற சுற்று மடலிலிருந்து:

ஆசியத் திருச்சபை என்ற சுற்றுமடலில், திருத்தந்தை பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

ஆசியத் திருச்சபையானது பங்கேற்கும் திருச்சபையாகத் திகழ வேண்டுமாயின், அது திருச்சபையின் பணியிலிருந்து யாரையும் ஒதுக்கலாகாது. ஆசியத்திருச்சபையின் பணியிலும், வாழ்விலும் பெண்களின் கூடுதல் பங்கேற்பு அவசியம். பங்கேற்கும் திருச்சபையாக ஆசியத் திருச்சபையை அமைக்க வேண்டுமென்பதை ஆசியத் திருச்சபையின் ஆயர் மன்றத்தந்தையர் உணர்ந்துள்ளனர். பெண்கள் விசுவாசத்தைப் பிறருக்கு வழங்குவதற்கான சிறப்புப் பண்பைப் பெற்றுள்ளனர். இயேசுவும் தனது நற்செய்திப் பணியில் இதனைச் செயற்படுத்தியுள்ளார். யாக்கோப்பின் கிணற்றடியில் இயேசுவைச் சந்தித்த சமாரியப் பெண்ணுக்கு நிகழ்ந்தது இதுவே: புதிய விசுவாசம், யூத எல்லையைக் கடந்து பரவுவதற்கு இயேசு அவரை அழைத்தார்.

திருச்சபையின் பணியை உயர்த்துவதற்கு பெண்களுக்கு இறையியல் மற்றும் உயர்கல்வி பெறும் வாய்ப்புக்களும் கூடுதலாக வழங்கப்படவேண்டும்; குருமடங்கள், பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் ஆண்கள், தம்பணியில் பெண்களை உடன் உழைப்பாளர்களாகக் கருதும் பயிற்சி வழங்கப்பட வேண்டும். பங்குப் பேரவைகளிலும், மறைமாவட்ட மேய்ப்புப் பணிசார்ந்த அமைப்புக்களிலும் திட்டங்களிலும், பெண்கள் அதிகம் ஈடுபட வேண்டும். ஆசியாவில் மேலும் பெண்களுக்கெதிராக பல அநீதிகளும் அடக்குமுறைகளும், உரிமை மீறல்களும் நிகழ்வதைக் குறிப்பிட்டு,

திருச்சபையின் பணியை உயர்த்துவதற்கு பெண்களுக்கு இறையியல் மற்றும் உயர்கல்வி பெறும் வாய்ப்புக்களும் கூடுதலாக வழங்கப்படவேண்டும்; குருமடங்கள், பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் ஆண்கள், தம்பணியில் பெண்களை உடன் உழைப் பாளர்களாகக் கருதும் பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

இதன் நிமித்தம் ஆசியத்தலத்திருச்சபைகளில் எங்கெல்லாம் இயலுமோ அங்கெல்லாம், பெண்களின் சார்பாக, அடிப்படை மனித உரிமைகளைக் காக்க முயற்சிகளை மேற் கொள்ள வேண்டுமென்று ஆசிய ஆயர் மன்றம் முன்வைத்த கருத்தைத் திருத்தந்தை தம்மடலில் குறிப்பிட்டுள்ளார்.

## 2.2. "பெண்ணின் மேன்மை" என்ற சுற்றுமடலிலிருந்து.......

திருத்தந்தை 2ம் யோவான் பவுல் அவர்கள் மரியாள் விண்ணேற்படைந்த ஆவணி 15ம் நாள் 1988ம் ஆண்டில் "பெண்ணின் மேன்மை" என்ற திருமடலை வெளியிட்டுள்ளார். அதில் மீட்பின் வரலாற்றில் பெண்களின் முக்கியத்துவம் அவர்களின் சிறப்பிடம் பற்றிக் கூறப்படுகிறது. மீட்பு மறைபொருளின் மையமாக மரியாள் என்ற ஒரு பெண் இருக்கிறார். அறிவுக்கெல்லாம் அப்பாற்பட்ட பரமதிரித்துவக் கடவுள் தம்மையே நாசரேத்தூரில் கன்னி மரியாளுக்கு வெளிப்படுத்தினார். இவ்வாறு மரியாள் மனித இயல்புக்கு மேம்பட்ட இறை ஒன்றிப்பைப் பெற்றாள். இந்த ஒன்றிப்பு யூத குலப் பெண்கள் எதிர்பார்த்த மேன் மைக்கு மிகவும் மேலானது. எனத் திருத்தந்தை அவர் கள் குறிப்பிடுகிறார். மேலும், ஆதியாகமத்தில் மனிதனின் ஆளுமை விபரிக்கப்பட்டுள்ளது. ஆணும் பெண்ணும் சமமானவர்கள் ஏனெனில் இவ்விருவருமே ஆள் தன்மை யுடைய கடவுளின் சாயலாகவும் பாவனையாகவும் படைக் கப்பட்டவர்கள். இவர்களின் சமத்துவத்தை ஏற்றுக் கொள்ள விவிலியம் போதுமான விளக்கத்தைத் தருகின்றது; திருமண உறவில் ஆணும், பெண்ணும் ஒருவருக் கொருவர் மரியாதையாக நடக்க வேண்டும். ஒருவர் ஒருவருக்குரிய ஆளுமையை நிறைவுபடுத்திக் கொள்ள வேண்டும். பெண் அடக்குமுறைக்கு உட்பட்டவளாகவும் ஆணின் உடைமைப் பொருளாகவும் ஆகக்கூடாது; எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆணும் பெண்ணும் சமமானவர்கள் ஏனெனில் இவ்விருவருமே ஆள் தன்மையுடைய கடவுளின் சாயலாகவும் பாவனையாகவும் படைக்கப்பட்டவர்கள்.

நற்செய்தியில் வேறுபட்ட சமூகநிலையிலும், வயதிலும் உள்ள பல பெண்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். இப்பெண்கள் இயேசுவைச் சந்தித்தும், அவரிடமிருந்து பல நன்மைகளையும் பெற்றிருக்கின்றனர். இன்னும் இறையரசைப் போதித்த அவரின் சீடரோடு இயேசுவைப் பின்தொடர்ந்தனர். அவரின் உவமைகளிலும் சில சமயங்களில் பெண்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவ்வாறு இயேசுவின் சொல்லும், செயலும் பெண்களுக்குரிய மரியாதையையும் மதிப்பையும் வெளிப்படுத்துகின்றன. இவ்வாறு கிறிஸ்து தம் காலத்து மக்கள் மத்தியில் பெண்ணின் மெய்யான மேன்மையையும்,

அம்மேன்மைக்கு ஏற்ற அழைப்பையும் உயர்த்தியுள்ளார் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

## முடிவுரை

பெண்கள் தங்கள் பெண்மையின் முழுப்பொருள் என்னவென்பதைக் கண்டு பிடித்து, தங்களையே பிறருக்கு உண்மையுடன் கையளித்து, அதனால் தங்களைக் கண்டு கொள்ளலாம் என்றும் திருத்தந்தை அவர்கள் "பெண்ணின் மேன்மை" என்ற தன் திருமடலில் குறிப்பிட்டு, மனித வரலாற்றில் சகல தேசத்து மக்கள் மத்தியிலும் உதித்த பெண் திறமைசாலிகளின், அருஞ்செயல்களுக்காகவும், பெண்களின் புனிதத் தன்மையினால் விளைந்த நல் விளைவுகளுக்காகவும் திருச்சபை பெண்களுக்கு நன்றி கூறுகிறது என குறிப்பிடும் திருத்தந்தை தம் அப்போஸ்தலிக்க ஆசியுடன் திருமடலை நிறைவு செய்கிறார். (Ecclesia de Eucharistia)

## ஊ. "நற்கருணையின் திருச்சபை" சுற்றுமடலில் "நற்கருணையின் பெண்மணி" பற்றி

திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் வெளியிட்ட 14வது இத்திருமடல், முற்று முழுதாக நற்கருணையைப் பற்றி ஆழமான முறையில் ஆராய்கிறது. 2003ம் ஆண்டு பெரியவியாழன்று ஆண்டவரின் பாஸ்கா தின ஆராதனையின்போது உத்தி யோகபூர்வமாக வெளியிடப்பட்டது. 6அத்தியாயங்களைக் கொண்ட இத்திருமடலின் இறுதி அத்தியாயம் முழுவதும் "நற்கருணையின் பெண்மணி" என மரியாளைக் குறிப்பிட்டு மரியாள் எவ்வாறு நற்கருணை வாழ்வை வாழ்ந்தார் என அழமாக விபரிக்கிறது.

திருத்தந்தை அவர்கள், திருச்சபைக்கும், நற்கருணைக்குமிடையிலான தனித் துவமான உறவின் செழிப்பை விபரிக்க வேண்டுமாயின் மரியாளை விலக்கிவிட முடியாது. ஏனெனில் மரியாள், திருச்சபைக்குத் தாயும், திருச்சபைக்கு ஒரு சிறந்த மாதிரியுமாயுள்ளார் எனக் குறிப்பிடுகிறார்.

திருத்தந்தை தன் அப்போஸ்தலிக்கத் திருமடலாகிய (Rosarium Virginis Mariae) "திருச்செபமாலையின் கன்னிமரியாள்" என்ற திருமடலில் கன்னிமரியாள் கிறிஸ்து சார்பில் நிறைவாக்கும் ஆசிரியையாயுள்ளார் என்றும், ஒளியின் மறை நிகழ்ச்சிகளில் நற்கருணையின் உருவாக்கத்தை தான் திருச்செபமாலையில் சேர்த்

துள்ளதாயும், மரியாள் எம்மை திவ்விய நற்கருணையை நோக்கி வழிநடத்த வல்லமை உடையவராயும் நற்கருணையின் பால் அவளிடம் தனித்துவமான நெருங்கிய உறவு உள்ளது என்றும் குறிப்பிடுகிறார்.

"இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்ற இயேசுவின் இறுதி இராவுணவுக் கட்டளைக்கு மரியாள் எம்மை எதுவித தயக்கமும் இன்றிக் கீழ்ப்படியுமாறு அழைக் கிறாள். "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" (யோவான் 2:5) என்று கானா ஊர்த் திருமண வேளையில் இயேசுவின் சீடருக்கு வலியுறுத்திய மரியாள் இன்றும் எம்மை அதே வார்த்தைகளால் ஊக்குவிக்கிறார்.

குறிப்பிடத்தக்க அளவில் மரியாள் நற்கருணை நிறுவப்படுவதற்கு முன்பே நற்கருணை வாழ்வை வாழ்ந்தாள் ,எனக்கூறலாம். எவ்வாறெனில் மரியாள் தன் கன்னி உதரத்தையே வார்த்தை மனுவுருவாகக் கையளித்தார். கபிரியேல் என்ற வானதூதர் மரியாவிடம் வந்தபோது மரியாள் இயேசுவைத் தன் உதரத்தில் தாங்கும் விருப்பத்தை "ஆமென்" என்று வெளிப்படுத்தியது போல இயேசுவை நற்கருணை வடிவில் பெறும் ஒவ்வொரு விசுவாசியும் "ஆமென்" என்றே பெறுகின்றார்.

மரியாள் மனுவுருவான வார்த்தையானவரைத் தன் உதரத்திலே தாங்கிச் சென்று ஒரு வகையில் முதல் நற்கருணைப் பேழையானாள்.

எலிசபேத் என்ற தன் வயது முதிர்ந்த மைத் துனியை மரியாள் சந்திக்கச் சென்ற வேளையில், மரியாள் மனுவுருவான வார்த்தையானவரைத் தன் உதரத்திலே தாங்கிச் சென்று ஒரு வகையில் முதல் நற்கருணைப் பேழையானாள்.

**முடிவாக:**

நற்கருணை, மரியாள் பாடிய புகழ்பாடல்போன்று முதலும், மேலானதுமான புகழ்ச்சியும், நன்றியுமாகும். மரியாள் தன் புகழ் பாடலில் "என் ஆன்மா ஆண்டவரை ஏற்றிப் போற்றுகிறது; என் மீட்பராம் கடவுளை நினைந்து என் மனம் பேருவகை அடைகிறது......", என்று இயேசுவைத்தன் உதரத்தில் தாங்கியவளாய் இயேசு வழியாக, இயேசுவில், இயேசுவோடு இறைவனைப் போற்றுகிறார். இது தன்னுள் "நற்கருணை மனப்பாங்கை" உண்மையில் எண்பிக்கிறது. இவ்வாறு மரியாளைப் பற்றிய சிந்த னையோடு சுற்றுமடலைத் திருத்தந்தை நிறைவு செய்கிறார்.

## 4. "ஆண்டவரே எங்களோடு தங்கும்!" (Mane Nobiscum Domine)
### நற்கருணையின் சிறப்புப் பற்றி:

திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் தனது தலைமை ஆயர் பணியின் 27ம் ஆண்டைத் தொடங்கியபோது நற்கருணை ஆண்டை முன்னிட்டு இத்திரு மடலை வெளியிட்டார். இதில், நற்கருணையின் உட்பொருளை ஆழமாக உணரக் கூடிய முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

தம்மோடு எம்மாவு பாதையில் பயணித்தவர் இயேசு என்பதை உணரமுடியாத, வாடிய உள்ளங் கொண்ட சீடருக்கு இயேசு மறைநூலை விளக்கியதால் அவர்களின் மூடியிருந்த உள்ளம் திறக்கப்பட அவர்களுக்கு நம்பிக்கையும் ஆர்வமும் பொங்கியது; ஆகவே அவரை நோக்கி "எங்களோடு தங்கும் ஆண்டவரே!'" என வேண்டினர். அவ்வேளையில் இயேசுவின் "அப்பத்தைப்பிட்குதல்" செயல்மூலம் சீடரின் கண்கள் திறக்கப்பட அவர்கள் இயேசுவை அடையாளம் கண்டு கொண்டனர். "இதோ நான் உலக முடிவுரை உங்களோடு இருக்கிறேன்" (மத். 28:20) என்ற இயேசுவின் வார்த்தையிலே நம்பிக்கை கொண்டு துன்ப துயரங்களின் மத்தியிலும் இயேசுவின் பிரசன்னத்தைக் கண்டு கொள்ள இன்றும் நற்கருணை எமக்குத்துணைபுரிகிறது. இயேசுவின் இறப்பு, உயிர்ப்பு மறை நிகழ்ச்சிகளை நிகழ்காலத்தில் நிலைப்படுத்துவதாக "அப்பத்தைப் பிட்குதல்" இன்றும் திருச்சபையில் மையமாகத் திகழ்கிறது.

இயேசுவின் திருமுகத்தை மரியாவின் பார்வையூடாகத் தியானிக்க முடியும், எனவும் குறிப்பிட்டுள்ளார். நற்கருணை நன்றி கூறுதலை முக்கிய பரிமாணமாகக் கொண்டுள்ளது. இவ்வுலகின்பால் அல்ல மாறாக அனைத்திற்கும் மேலாக இறைவனையே முதலாகக் கொண்டு கடவுளுக்கு நன்றி செலுத்தும், மனப்பாங்கை நற்கருணை எம்மில் வளர்க்கிறது. நற்கருணை திருச்சபை வாழ்வில் ஒன்றிப்பை ஏற்படுத்தி, கிறிஸ்தவன் ஒவ்வொருவனும் ஒருமைப்பாட்டையும், சமாதானத்தையும், தோழமையையும் ஏற்படுத்தும் கருவியாக தன்னை மாற்றக் கற்றுக் கொள்ள இவ் அருட்சாதனம் பேருதவி புரிகிறது.

நற்கருணை திருச்சபை வாழ்வில் ஒன்றிப்பை ஏற்படுத்தி, கிறிஸ்தவன் ஒவ்வொருவனும் ஒருமைப்பாட்டையும், சமாதானத்தையும், தோழமையையும் ஏற்படுத்தும் கருவியாக தன்னை மாற்றக் கற்றுக் கொள்ள இவ் அருட்சாதனம் பேருதவி புரிகிறது.

## முடிவாக:

நற்கருணை மூலம் நிறைவாழ்வின் திருப்பயணத்திற்கான சக்தியைப் பல புனிதர்கள் கண்டு எமக்கோர் முன் உதாரணமாகத் திகழ்கின்றனர். அன்னை மரியாள் நற்கருணையில் தன் வாழ்வைப் பதித்து எமக்குத் துணையாகத் திகழ்கிறார். நற்கருணை மறைபொருளுடன் தன்னை முழுமையாக இணைந்துள்ள மரியாவின் உறவை நம முன்மாதிரிகையாகக் கொள்ள வேண்டும். திருச்சபையானது நற்கருணையே தன் வாழ்வின் ஊற்றும் உச்சமும் என்பதை மரியாவின் துணையோடு உணர ஆவல்கொள்ள வேண்டுமெனத் திருத்தந்தை தன் பேராவலை இத் திருமடலில் வெளியிட்டுள்ளார்.

## நிறைவாக:

ஒரு திருத்தந்தை கிறிஸ்துவின் பிரதிநிதியாக, தலைமை ஆயனாக உலகத் திருச்சபையை வழிநடத்தும் பொறுப்பைப் பெற்றுள்ளார். திருச்சபையில் தூய பேதுருவின் 264வது வாரிசாகத் திருத்தந்தை 2ம் யோவான் பவுல் திகழ்ந்தார். ஆகவே திருத்தந்தை அவர்கள் கிறிஸ்து இயேசுவின் இறுதி விருப்பமும், கட்டளையுமான "இதை என் நினைவாகச் செய்யுங்கள்", என்ற ஆண்டவரின் இறுதி இராவுணவாகிய நற்கருணை விருந்தை திருச்சபை கிறிஸ்துவுக்குப் பிரமாணிக்கமாக எப்போதும் நினைவுகூர்ந்து கொண்டாடி அதனால் ஊட்டம் பெற வேண்டுமென்பதில் ஆர்வத்துடன் செயற்பட்டார். தமது சுற்றுமடல்கள் வாயிலாக நற்கருணை பற்றிய விசுவாசிகளின் நம்பிக்கை ஆழப்பட வேண்டுமென்று திருத்தந்தை அவர்கள் நற்கருணை பற்றிய ஆழ்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தினார். அத்தோடு அன்னை மரியாளை நற்கருணையோடு தொடர்புபடுத்தி, "நற்கருணையின் பெண்மணி" என்றும் அவள் எவ்வாறு கிறிஸ்துவுக்குப் பிரமாணிக்கமாக நற்கருணை வாழ்வை வாழ்ந்தார், என்றும் குறிப்பிடுகிறார். இதன் மூலம் ஏனைய கிறிஸ்தவ பெண்களும் மரியாளைத் தம் மேல்வரிச் சட்டமாகக் கொண்டு தம் வாழ்வை அமைக்க வேண்டுமென்பதே திருத்தந்தையின் நோக்கமாகும். மேலும் பெண்களின் உரிமைகள் மதிக்கப்படவேண்டுமென்றும் அவர்களின் சமத்துவத்தையும், அவர்கள் திருச்சபையில் கூடுதலான பங்களிப்பை வழங்குவதை ஊக்குவிக்க வேண்டுமென்றும் திருத்தந்தை அவர்கள் தம் மடலில் குறிப்பிட்டுள்ளார். நற்கருணை

> ஏனைய கிறிஸ்தவ பெண்களும் மரியாளைத் தம் மேல்வரிச்சட்டமாகக் கொண்டு தம் வாழ்வை அமைக்க வேண்டுமென்பதே திருத்தந்தையின் நோக்கமாகும்.

ஆண்டவரும், அன்னை மரியாவும் திருச்சபையில் வாழ்வில் நெருக்கமாக ஒன்றிணைக்கப்பட்டுள்ளனர். ஆகவே இவை இரண்டிலும் அளவு கடந்த பக்தி கொண்ட திருத்தந்தை 2ம் யோவான் பவுல் திருச்சபையை நீண்ட 27 ஆண்டுகள் மிகச் சிறப்பாக வழிநடத்தினார். நற்கருணையில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு, அன்னை மரியாளின் பக்தி கொண்டு வாழ்ந்தமையே திருத்தந்தையின் வாழ்வின் வெற்றியின் ரகசியமாகும்.

## *உசாத்துணை நூல்கள்*


1. Pope John Paul II, **Ecclesia De Eucharistia**, **திருச்சபையும் நற்கருணையும்** 2003.
2. Pope John Paul II, **Ecclesia in Asia ஆசியத் திருச்சபை**, 1999.
3. Letter of Pope John Paul II to women, **பெண்ணின் மேன்மை**, 1988.
4. Mane Nobiscum Domin, திருத்தந்தை 2ம் யோவான் பவுல், **ஆண்டவரே! எங்களோடு தங்கும்!** 2004.
5. L'osservatore Roman; Weekly Edition in English, 30, Jan. 2002, Vatican City.




# “விண்ணிலிருந்து விடியல் ஒன்று”

அருட்சகோ. அ. கிறிஸ்ரி றூபன் வெனான்டோ

## முன்னுரை

காலத்தின் அறிகுறிகள் என்பது பற்றி இந்த காலங்களிலே குறிப்பாக சுனாமி அனர்த்தங்கள் வில்மா, றீற்றா, கத்தறீனா போன்ற கடும்புயல்கள், அகோரமான நில நடுக்கங்கள், வெள்ளப்பெருக்குகள் என்பவைகள் இப்புவியின் பல பகுதிகளையும் தாக்கி பல மனித உயிர்களையும் நாசம் பண்ணி சொத்துக்களை அழித்த வடுக்கள் மாறாத நேரத்திலே மீண்டும் ஒரு கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாகின்றோம். இன்று எமது நாட்டிலே காலத்தின் அறிகுறி என்ன என்பதை சொல்லிக்காட்ட வேண்டிய அவசியமில்லை. நாளை என்ன நடக்குமோ என்ற அங்கலாய்ப்பு ஒரு புறம்; போர்மேகம் மீண்டும் எம்மை அழித்துவிடுமோ?, A - 9 பாதை அடைபட்டுவிடுமோ? ஹர்த்தாலும், கதவடைப்பும் நாளை நடைபெறுமோ? எங்கே, எப்பொழுது என்ன நடக்குமோ என்ற பயமும் பீதியும் ஆட்கொள்ள உரிமைக்காக மட்டுமன்றி உயிருக்காகவும் போராடும் காலமாகவும் இருக்கின்றது. இவ்வாறான கால சூழ்நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒவ்வொரு மானிடனுக்கும் கிறிஸ்து பிறப்பானது எதை உணர்த்துகின்றது என்பதை ஆராய்வோம்.

ஹர்த்தாலும், கதவடைப்பும் நாளை நடைபெறுமோ? எங்கே, எப்பொழுது என்ன நடக்குமோ என்ற பயமும் பீதியும் ஆட்கொள்ள உரிமைக்காக மட்டுமன்றி உயிருக்காகவும் போராடும் காலமாகவும் இருக்கின்றது.

## வரலாற்றில் கிறிஸ்து பிறப்பு விழா

கிறிஸ்மஸ், கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் விழாவாகும். இவ்விழா வானது முதன் முதலில் மேற்குத் திருச்சபையிலே கி.பி. 336 ஆண்டில் ஆரம்பிக் கப்பட்டு மார்கழி 25 ஆம் திகதி மேற்கு திருச்சபை வாழ் கிறிஸ்தவர்களினால் கொண்டாடப்பட்டும் வரத்தொடங்கியது. இக்காலப்பகுதியில் உரோமையர் வெற்றிபெற முடியாத சூரியனின் பிறப்பு நாளையும், பேரரசன் அவுரேலியுவின் பிறப்பு நாளையும் கொண்டாடி வந்தனர். காலப்போக்கில் உரோமையர் இதற்கு மாறாக கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடத் தொடங்கினர். உலகிற்கு சக்தியாகவும் உலகின் இருளுக்கு ஒளியாகவும் விளங்கிய சூரியனுக்கு விழா எடுத்த மக்கள் தமது இருள் சூழ்ந்த உள்ளத்திற்கு ஒளியாகவும், உலகின் அடிமைத்தனத்திற்கு விடிவிளக்காகவும் வந்துதித்த கிறிஸ்துவிற்கு விழா எடுத்தனர். இவ்வாறு சூரிய வழிபாடு கிறிஸ்து பிறப்பு விழாவாக உருவெடுத்தது.

அலெக்சாந்திரியாவிலும் கிழக்குத் திருச்சபைகளிலும் தொடக்கத்தில் இயேசுவின் பிறப்பு இயேசுவின் திருமுழுக்கை நினைவுபடுத்தும் திருக்காட்சி விழாவுடன் சேர்த்து தைத்திங்கள் 6ம் நாள் கொண்டாடப்பட்டது. கிழக்குத் திருச்சபையின் சில பிரிவுகள் இன்றும் இந்நாளிலே இயேசுவின் பிறப்பைக் கொண்டாடுகின்றன.

வரலாற்றிலே 'கிறிஸ்மஸ்' என்ற வார்த்தையானது "கிறிஸ்மஸ் மேஸ்ஸே" என்ற வார்த்தையில் இருந்து வந்தது. இந்த பழைய ஆங்கில வார்த்தையின் பொருள் "கிறிஸ்துவின் திருப்பலி" ஆகும். மேலும் மேற்குத் திருச்சபை வழிபாட்டில் தந்தையின் உள்ளத்திலிருந்தும், மரியாளின் உதரத்திலிருந்தும் விசுவாசிகளின் ஆன் மாக்களிலும் இயேசு பிறக்கும் முற்பிறப்பை குறிக்கும் முறையில் மூன்று திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டு வந்தன. இப்பாரம்பரிய கருத்தை வெளிக்கொணரும் சொல் லாகவே "கிறிஸ்துமஸ்" என்ற சொல் அமைகின்றது.

## கிறிஸ்து மனிதனாக

தூய திரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய இயேசு கிறிஸ்து மனிதர் அனைவரின் மீட்புக்காகவும், "தேவ தூதர்கள் வணங்கி நிற்க, வானக அரியணை யில் தந்தையின் மாட்சிமையில் வீற்றிருக்கும் நிலையை கிறிஸ்து மனித அவதாரம் எடுத்து தம்மை தாழ்த்திக்

> "தேவ தூதர்கள் வணங்கி நிற்க, வானக அரியணையில் தந்தையின் மாட்சிமையில் வீற்றிருக்கும் நிலையை கிறிஸ்து மனித அவதாரம் எடுத்து தம்மை தாழ்த்திக்கொண்டார்" (பிலிப்பியர் 2: 6-8).

கொண்டார்" (பிலிப்பியர் 2: 6–8). மனிதவதாரம் எடுத்தார் என்பது பலருக்கு புரியாத புதிராகத்தான் இருக்கின்றது. மீட்பு என்பது என்ன? பூரண நிறைவைப் பெறுவது தான் மீட்பு. இறைவன் படைத்த மனிதர்கள் (முதல் பெற்றோர்) பூரண நிறைவுக்கு வளர்ந்து வருபவர்களாக இருந்தார்கள். இது இறைவனிடம் அவர்கள் கொண்டிருந்த நல்லுறவால் சாத்தியமாயிற்று. இறைவன் மனிதன் நல்லுறவின் பலன்தான் பேரின்ப வீடு. அதாவது ஏதேன் தோட்டம். இவ்வனுபவத்தை மனிதன் பாவம் செய்ததால் இழந்தான். மனிதன் பூரண நிலையில் இருந்து தவறிக்கொண்டே பாவச்சேற்றிற்குள் மூழ்கத் தொடங்கினான். இந்நிலையில்தான் இறைவன் பூரண நிறைவுள்ள மனிதனை வெளிப்படுத்துவதற்காக மனிதவதாரம் எடுத்தார்.

பூரண நிறைவுள்ள இயேசுவோடு ஒப்பிட்டு நோக்கினால் தான் மனிதரின் குறைகள் விளங்கும் வரலாற்றில் இயேசுவைக் கண்டால்தான் இறைவனின் உருவமும் சாயலும் விளங்கும். "அவர் கட்புலனாகாத கடவுளது சாயல்; படைப்பனைத்திலும் தலைப்பேறு" (கொலோ 1:15). "இவரது நிறைவிலிருந்து நாம் யாவரும் நிறைவாக அருள் பெற்றுள்ளோம்" (யோவா 1:16). இறைவன் மனிதனுக்கு ஆதியில் அருளிய பூரண நிறைவை முதல் பெற்றோரின் பாவத்தால் இழந்த ஒப்பற்ற அருள்வரத்தை, மீண்டும் அடைவதுதான் மீட்பு. அது யேசுகிறிஸ்து மனிதனாகியதன் வாயிலாகவே சாத்தியமாகின்றது.

Happy Birthday Happy Birthday Happy Birthday

பூரண நிறைவுள்ள இயேசுவோடு ஒப்பிட்டு நோக்கினால் தான் மனிதரின் குறைகள் விளங்கும் வரலாற்றில் இயேசுவைக் கண்டால்தான் இறைவனின் உருவமும் சாயலும் விளங்கும்.

## மாட்டுத்தொழுவத்தின் செய்தி

இறைவன் இஸ்ராயேல் மக்களின் வாழ்க்கையை கண்டு மனம் வருந்துகின்றார். அதை அவர் இறைவாக்கினர் ஏசாயா வாயிலாக வெளிப்படுத்துகின்றார். "பிள்ளைகளைப் பேணி வளர்தேன்; அவர்களோ எனக்கெதிராக கிளர்ந்தெழுந்தார்கள். காளை தன் உடைமையாளனை அறிந்து கொள்கின்றது. கழுதை தன் தலைவன் தனக்கு தீனிபோடும் இடத்தை தெரிந்துகொள்கின்றது. ஆனால் இஸ்ராயேலோ என்னை அறிந்துகொள்ளவில்லை; என் மக்களோ என்னைப் புரிந்து கொள்ளவில்லை" (எசா 1:2–3) கடவுளே தீவனத்

கீழே இறங்கி வந்தால், கீழே இருக்கும் மனிதனால் மேலே இறைவனோடு நல்லுறவு கொள்ள இயலும் அதனால் தான் இறைவன் மனிதவதாரம் எடுத்து மாட்டுத்தொழுவத்தில் பிறந்தார்.

தொட்டியில் தமது மக்களுக்கு அப்பமாக பிறந்தார் மனிதனாக. கீழே இருக்கும் மனிதனால் மேலே ஏறிச் செல்ல இயலாது. மேலே இருக்கும் இறைவன் கீழே இறங்கி வந்தால், கீழே இருக்கும் மனிதனால் மேலே இறைவனோடு நல்லுறவு கொள்ள இயலும் அதனால் தான் இறைவன் மனிதவதாரம் எடுத்து மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார்.

இயேசு பிறந்தது பெத்லகேம் என்ற தாவீதின் ஊரில் பெத்லகேம் என்றால் அப்பத்தின் ஊர் என்று பொருள். அவ்வாறு கடவுள் நம்முடன் இருக்கின்றார் என்பது உண்மையாயிற்று. ஹெம் – உடன், அனு – நம், ஏல் – இறைவன், இதுதான் இம்மானுவேல். படைத்தவரான கடவுள் தமது படைப்பான மனிதனிடம் வைத்திருந்த எல்லையற்ற அன்பால் தாமே படைப்பைப்போன்று ஆகின்றார். மிகச் சிறியோருக்குக் கூட கடவுள் அண்மையில் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இறைமகன் மிகச் சிறியவனாக ஏழ்மையின் வடிவம் பூண்டு மாட்டுத்தொழுவத்திலே பிறந்தார்.

## இதோ மாபெரும் நற்செய்தி

யூதர்கள் மீட்பருக்காகத் தலைமுறை தலைமுறையாகக் காத்திருந்தனர். “இதோ, கருவுற்றிருக்கும் அந்த கன்னி ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார்; அக் குழந்தைக்கு அவர் இம்மனுவேல் என்று பெயரிடுவார் (எசா 7:14) என்று இறை வாக்கினர் எசாயா, கிறிஸ்து பிறப்பதற்கு 740 ஆண்டுகளுக்கு முன்பே கூறியிருந்தார். மீட்பர் யூதர்களுக்காக மட்டுமல்ல, இவ்வுலகிற்காகவே பிறந்தார் என்று விண்ணக தூதர் பேரணி பறைசாற்றியது; “இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கின்றார்” (லூக்காஸ் 2:10–11)

> இந்நற்செய்தியை உலகிற்கு அறிவிக்க ஆண்டவர் சாதாரண இடையர்களைத் தேர்ந்தெடுத்தார். உலக மீட்பரைப் பஞ்சு மெத்தையில் உறங்கி பட்டு ஆடை அணியும் செல்வர்கள் அல்ல.

இந்நற்செய்தியை உலகிற்கு அறிவிக்க ஆண்டவர் சாதாரண இடையர்களைத் தேர்ந்தெடுத்தார். உலக மீட்பரைப் பஞ்சு மெத்தையில் உறங்கி பட்டு ஆடை அணியும் செல்வர்கள் அல்ல. முதன் முதலாகக் காண வேண்டியது, மாறாக சாதாரணமானவர்கள் தான் காணவேண்டும் என்பதே இறைவனின் திரு வுளமாக இருந்தது. இயேசு பிறந்த செய்தி முதலில் இடையர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. யார் இந்த

பாலைவனப் பகுதிகளிலும் அதன் எல்லைப்புறங்களிலும் இக்காலத்தில் வாழும் "Bedouin" 'பிடுயின் போல அக்காலத்தில் இடையர்களும் நாடோடிகளாக காணப் பட்டார்கள். அவர்கள் பரந்த வெளியில் வாழ்ந்தார்கள். இடையர்கள் பல காரணங்களின் நிமித்தம் சமூகத்தின் ஏனைய மட்டத்தினரால் வெறுக்கப்பட்டார்கள். இவர்கள் நேர் மையற்றவர்கள், கள்வர்கள் என்றும் சட்டம் கருதியது. யூதர்களின் நோக்கில் மந்தை மேய்ப்போர் அல்லது இடையர்கள் மிகமோசமான தொழில் செய்பவர்களாக 23ம் சங்கீதத்துக்குரிய 'மிட்ராஜ்' (Midrash) அழுத்திக் கூறுகின்றது. ஆடுமேய்ப்பவனின் தொழிலைவிட கேவலமான தொழில் இல்லை. "Philo"வும் இதே பாணியிலே இடையர்களைப் பற்றி எழுதுகின்றார். இப்பிடிப்பட்டவர்களுக்குத்தான் இயேசுவின் பிறப்பு முதன் முதல் அறிவிக்கப்படுகின்றது.

## பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலை

"அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபரனாகி அருளிய பெருமையைச்
சிறுமையென்றிகழாதே" என்கின்றார் மாணிக்கவாசகர்.

"அருபரத் தொருவன் அவனியில் வந்து குருபரனாகி அருளிய பெருமையைச் சிறுமையென்றிகழாதே" என்கின்றார் மாணிக்கவாசகர்.

ஆன்ம விடுதலையை நோக்கி மனுக்குலம் ஏங்கிக்கிடந்தது, ஏனெனில் சாத்தானின் பொய்யை நம்பி மனிதன் தனது ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்ட தெய்வீக வல்லமையை இழந்தான். அதனால் அவனால் ஐம்புலன்களால் மட்டுமே எதையும் புரிந்து கொள்ளமுடியும் என்ற தாழ்ந்த நிலையை அடைந்தான். அதனால் உருவமற்றவரான இறைவனால் மனிதரோடு தொடர்புகொள்ள இயலாத நிலை ஏற்பட்டது. காரணம் முக்திவாசல் அடைபட்டுப்போயிற்று. அடைபட்ட வாயில் திறந்தால் தான் முக்தியின்பம் கைகூடும். வாயிலைத் திறப்பதற்கு என்ன செய்ய வேண்டும். இறைவனுக்கு எதிராக செய்யப்பட்ட பாவங்களிற்கு பரிகாரம் செய்து அவருடன் ஒப்புரவாக வேண்டும். இதனை மனிதனால் செய்து கொள்ள இயலாமலிருந்தது. இரக்கமுள்ள இறைவன் மனிதனை தள்ளி உதறிவிடவில்லை. அந்த அடைபட்ட வாயிலை திறந்து மனுக் குலத்துக்கு மீட்பை பெற்றுத்தர ஒரு இரட்சகரை அனுப்புவதாக வாக்களித்தார். மனிதரோடு மீண்டும் தொடர்பை பூரணமாக ஏற்படுத்தவே இறைவன் மனிதவதாரம் எடுத்தார்.

## அமைதியின் இரவு புனித இரவு இதோ. மீண்டும்....

ஒவ்வொரு ஆண்டும் மார்கழி 25ம் திகதி இயேசுவின் பிறப்பு விழாவைக் கொண்டாடுகின்றோம். அதற்காக பல மாதங்களுக்கு முன்னதாகவே அகில உலகமும் ஆடை உற்பத்திகள், கேளிக்கைப் பொருட்கள் தயாரிப்பு, உணவுப் பண்டங்கள் ஆடம்பர பொருட்கள் சந்தைப்படுத்தல் என்றவாறாக மக்களின் கவனத்தை ஈர்த்தவாறாக கிறிஸ்மஸ் கொண்டாட்டத்துக்காக அவர்களை ஆயத்தப்படுத்த தொடங்குகின்றன. நாங்களும் புது ஆடைகளை வாங்கி அணிகின்றோம், பாலனை குடிலில் தரிசிக்கின்றோம், அன்றைய நாளை சந்தோசமாக குடும்பமாக கழிக்கின்றோம். ஆனால் அந்த மகிழ்ச்சி எங்களுடைய வாழ்க்கையிலே பின்னரும் தொடர்கின்றதா? நாங்கள் யேசுவை எங்கள் உள்ளங்களில் பிறக்கவிட்டிருப்போம் என்றால், உண்மையில் அந்த மகிழ்ச்சியும், நிறைவும் பிறப்பு விழாவுக்குப் பின்னர் எங்களுடைய உள்ளங்களிலே பிரதிபலிக்கும். எத்தனை துன்பங்கள், கவலைகள், வருத்தங்கள், வேதனைகள் வந்தாலும் நாங்கள் துவண்டு போக மாட்டோம்.

> எத்தனை துன்பங்கள்
> கவலைகள்,
> வருத்தங்கள்,
> வேதனைகள்
> வந்தாலும் நாங்கள்
> துவண்டு போக
> மாட்டோம்.

ஆனால் நாங்கள்தான் யேசுவை எங்களுடைய உள்ளங்களில் பிறக்க விடுதில்லையே. எங்களது பொறாமை, பகைமை, பழிவாங்கும் எண்ணங்கள், நான் என்ற அகங்காரம், மற்றவனை படுகுழிதோண்டி புதைக்கும் சிந்தனைகள், இரத்தத்திற்கு இரத்தம், பழிக்குப் பழி, அடக்கி ஆளும் விருப்புக்கள், ஆடம்பர சுகபோக களியாட்ட வாழ்க்கை முறைகள், மற்றவனைப்பற்றிய சிறிதளவும் சிந்தனையில்லாத நிலைகள்; இவ்வாறான வாழ்க்கை முறைகளினால் பிறக்கின்ற பாலகனை 'பாலன் குடிலிலே' மாத்திரம் பிறந்து கிடக்க விட்டுவிட்டு நாங்கள் திரும்பவும் சேறுபூசிக்கொண்டு திரும்பி விடுகின்றோம். நாங்கள் அன்று அணிகின்ற ஆடைகளும், ஆபரணங்களும் புதிதாக இருந்தாலும் எங்களுடைய உள்ளம் புதுமை அடைவதில்லை. புதுமை எங்கே இருக்கின்றது யேசு எங்களுடைய உள்ளக்கோவிலில் பிறப்பதில்தான்.

பகைமையை ஒழிப்போம். எனக்கு எனக்கென்கின்ற பேராசைகளை சுட்டெரிப்போம். மற்றவனுடைய உயிரை எடுத்து, அவனுடைய இரத்தத்தை குடித்து நான் அமைதிகாண முயல்வதை மறப்போம். அப்படி கண்டாலும் அது நிலையான அமைதியாகவும் இருக்க முடியாது. மனிதனை மனிதனாக மாண்புடன்

ஏற்றுக்கொள்ள ஆசைப்படுவோம். பிறருடைய சுதந்திரத்தையும், ஆளுமையையும் மதிப்போம். ஏழைகள், கைம்பெண்கள், சிறுவர்களை மதிப்புடனும், மாண்புடனும் நடாத்துவோம். ஒழுக்கம் மருவி, நாளொரு பொழுதும், பொழுதொரு வண்ணமுமாக சமூக கட்டுக்கோப்புகள் உடைந்து பாலியல்வன்முறைகள், பாலியல் இணக்க சீர் கேடுகள் என்பன கூடிச்செல்வதை மனமொத்து நிறுத்துவோம். பிறர் எனக்கு என்ன செய்யக்கூடாது என்று நான் நினைக்கின்றேனோ அதை நானும் மற்றவனுக்கு செய்யாமலிருக்க முயற்சி செய்வோம். எல்லோருடனும் அமைதியுடனும் சகிப்புத்தன்மை யுடனும் பொறுமையுடனும் வாழப் பழகிக்கொள்வோம். பிறரில் குறைகாணுவதை மாத்திரம் அளவுகோலாக கொண்டிராமல் அவரில் நன்மைத்தனங்களைக் கண்டு அவற்றை பாராட்ட கற்றுக்கொள்ளுவோம். நாம் பெற்றிருக்கின்ற உடலாலும் உள்ளத் தாலும் என்றும் கடவுளுக்கு புகழ்ச்சியையும், பெருமையும் சேர்ப்போம். அப்பொழுது யேசுபாலன் நிச்சயமாக எங்கள் உள்ளக் கோவிலில் வந்து குடிகொள்வார். எங்களது மகிழ்வை பன்மடங்காக்குவார்.

நட்சத்திரம், கேளிக்கை, விருந்துகள், ஆடம் பரம் என்றவாறாக மாத்திரம் இந்த கிறிஸ்மஸை களிக்க முற்படுவோம் என்றால், உலக மீட்பர் பிறக்க எங்களுடைய உள்ளங்களை திறக்கவில்லையென்றால், அன்று விடுதிதேடி சூசையப்பரும் மரியாளும் சென்ற போது அந்த விடுதிக்காவலன் சொன்னதுபோல "இங்கு இடமில்லை" என்பதே எங்களது பதிலாகவும் இருக்கும். மாறாக நாங்களும் யேசுவின் பிறப்பை பறைசாற்றிய இடையர்களைப் போல எங்களுடைய வாழ்வாலும் வார்த்தையாலும் பறைசாற்ற பாலகனின் அருள் வேண்டுவோமாக.

நாங்களும் யேசுவின் பிறப்பை பறைசாற்றிய இடையர்களைப் போல எங்களுடைய வாழ்வாலும் வார்த்தையாலும் பறைசாற்ற பாலகனின் அருள் வேண்டுவோமாக.

"இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போர்க்கு
ஒளிதரவும், நம்முடைய கால்களை அமைதி வழியில்
நடக்கச் செய்யவும், கடவுளின் பரிவுள்ளத்தாலும்
இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல்
நம்மை தேடிவருகின்றது" (லூக்காஸ் 1:78:79)

இரண்டாம் வத்திக்கான் சங்கம்

# நாற்பது ஆண்டுகளின் பின்னர்

அருட்திரு. ம. டேவிட்

## முகவுரை

இரண்டாம் வத்திக்கான் சங்கம் நடைபெற்று நாற்பது ஆண்டுகள் நிறைவுறும் இந்த ஆண்டில் நாம் இச்சங்கம் கொண்டிருந்த தீர்க்க தரிசனப் பார்வை, திருச்சபை பற்றிய கண்ணோட்டம் என்பன எந்தளவுக்கு இன்று திருச்சபைக் குள் புகுந்துள்ளது, என்பதனை நாம் மதிப்பீடு செய்ய வேண்டும்.

அண்மையில் நான் ஒரு பங்கிற்கு மறையுறையாற்ற சென்ற போது அந்த குருவானவர் இவ்வாறு சொன்னார். "இப்போது குருக்களாக வருபவர்களில் பலருடைய சிந்த னைகள் வத்திக்கான் சங்கத்துக்கு முற்பட்டதாக (Pre-Vatican) உள்ளது" என்றார். உதாரணத்துக்கு இவர்கள் பிறசமயத் தவரைப்பற்றி, பிரிந்த சபையினர் பற்றி, பொதுநிலையினரின் கடமைகள் உரிமைகள் பற்றி, தங்களின் குருத்துவ பணி பற்றி கொண்டுள்ள கருத்துக்கள் வத்திக்கான் சங்கத்துக்கு முற்பட்டவையாக உள்ளன. எனவே குருத்துவத்திலேயே வத்திக்கான் சங்கத்தின் சாறு முழுமையாக செல்லவில்லை என்றால் எவ்வாறு பொது நிலையினரிடையே இது சென்றிருக்க முடியும் என்று நினைக்கின்றேன்.

## சங்கத்தின் முக்கியத்துவம்

திருச்சபையில் நடைபெற்ற பொதுச்சங்கங்களில் மிக அதிமானவர்கள் பங்கு பற்றியதும் இன்னும் எல்லா மக்களையும் பிரதிநிதிப்படுத்தும் வகையிலும் நடைபெற்ற ஓர் பொதுச்சங்கம் இதுவாகும். முதலாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தில் எல்லாமாக 737 பேர் பங்கு பற்றினர். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் பங்குபற்றிய ஆயர்கள் மட்டும் 2,600 மேற்பட்டதாகவும் இன்னும் இறை இயலாளர்கள், இறைஇயல் நிபுனர்கள் ஆக 3,000 இற்கு மேற்பட்டவர்கள் பங்கு பற்றினார்கள். எண்ணிக்கையில் மட்டுமல்ல எல்லா நாடுகளையும் கல்ாச்சாரத்தையும் பிரதிநிதிப்படுத்தும் வகையில் பிரதிநிதிகள் இச்சங்கத்தில் இருந்தமை குறிப்பிடத் தக்கது. முதலாம் வத்திக்கான் சங்கத்தில் ஐரோப்பிய ஆயர்கள் அதிகமாக இருந்தனர். ஆனால் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் மறைபரப்பு நாடுகளில் இருந்தும் ஆயர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத் தக்கதாகும்.

> திருச்சபையில் நடைபெற்ற பொதுச் சங்கங்களில் மிக அதிமானவர்கள் பங்கு பற்றியதும் இன்னும் எல்லா மக்களையும் பிரதிநிதிப்படுத்தும் வகையிலும் நடைபெற்ற ஓர் பொதுச்சங்கம் இதுவாகும்.

இன்னும் கத்தோலிக்கர் அல்லாதவர்களும் (non-Catholics) பொது நிலையினரும் இன்னும் ரஷ்ய கீழைத்தேய திருச்சபையிலும் (Russian Orthodox church) இருந்து பிரதிநிதிகள் இச்சங்கத்தில் பங்குபற்றியது இச்சங்கத்தின் மற்றோர் சிறப்பம்சமாகும்.

இன்றும் இச்சங்கம் எதோ ஒரு தவறை திருத்துவதற்காக அல்லது எதிர்ப் பதற்காக கூட்டப்பட்ட ஓர் சங்கம் அல்ல. பழைய கோட்பாடுகளை (Ancient formulas) மீண்டும் திரும்ப சொல்வதற்காகவே அல்லது தப்பான போதனைகளை போதித்தவர்களை திருச்சபையில் இருந்து நீக்குவதற்காகவே இச்சங்கம் கூட்டப்படவில்லை. இச்சங்கத்தை கூட்டியபோது திருந்தந்தை 23ம் அருளப்பர் கூறிய வார்த்தைகள் இச்சங்கத்தின் உயரிய நோக்கை காட்டுகின்றது. இச்சங்கத்தின் நோக்கம் பிரிவினைகளின் விதைகளை அழித்து எல்லா மக்களிடையே ஒற்றுமையையும், சமாதானத்தையுமே ஊக்குவிக்கப்பதே என்றார்.

> இச்சங்கத்தின் நோக்கம் பிரிவினைகளின் விதைகளை அழித்து எல்லா மக்களிடையே ஒற்றுமையையும், சமாதானத்தையுமே ஊக்குவிக்கப்பதே என்றார்.

ஆக இச்சங்கம் ஒரு தனித்துவமான சங்கம் ஏனெனில் இது ஓர் உலகளாவிய தன்மை (Ecumenical) கொண்டமை எனவே இச்சங்கத்தின் ஊடாக கத்தோலிக்க திருச்சபை ஐரோப்பிய கலாசாரப் பின்னணியில் இருந்து ஓர் உலகளாவிய தன்மையை பெற்றுக் கொண்டமை திருச்சபையின் வரலாற்றின் ஓர் மூலைக்கல்லாகும்.

எனவே முதலில் இந்த சங்கம் விட்டுச் சென்ற சொத்து (Legacy) சிலவற்றை நாம் இங்கு ஆராய்ந்து அவை எந்தளவுக்கு இன்று நம் திருச்சபையில் ஊறியுள்ளது என்பதனை நாம் இங்கு ஆராய முயல்வோம்.

## 1. திருச்சபையில் ஆவியின் முக்கியத்துவம்

இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஆவியின் வழிகாட்டலின் ஓர் விளைவாகும். இச் சங்கத்தினுடாக ஆவியானவரே திருச்சபையின் வாழ்வின் அத்திவாரம், வாழ்வின் ஊற்று என்பதனை திருச்சபை மீள் கண்டுபிடிப்பு செய்தது. எனவே திருச்சபை என்பது ஆவியில் நிறைந்த (spirit–filled), ஆவியில் வழிநடத்தப்படுகின்ற (spirit-led) குழு என்பது வரையறுக்கப்பட்டது.

ஆவியானவரின் பிரசன்னமும் செயற்பாடும் கத்தோலிக்க திருச்சபைக்கு மட்டும் என்று மட்டுப்படுத்தப்பட்டது அல்ல. மாறாக கத்தோலிக்க ரல்லாத மற்றைய கிறிஸ்தவர்களிலும் அவர்களின் திருச்சபையிலும் இயங்கி அவர்களுக்கும் கொடை களைக் கொடுக்கிறார் என்று இச்சங்கம் முழங் கியது. இவ்வாறாக ஆவியானவர் உலகெங்கும் பிரசன்னமாக இருக்கிறார் என்கின்ற இந்த நிலைப் பாடு இறையியல் ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

ஆவியானவரின் பிரசன்னமும் செயற்பாடும் கத்தோலிக்க திருச்சபைக்கு மட்டும் என்று மட்டுப் படுத்தப்பட்டது அல்ல.

## 2. மதச் சுதந்திரமும் மதச் சகிப்புத்தன்மையும் (Relegious liberty and religious tolerance)

இந்த சங்கம் நடந்திருக்காவிட்டால் கத்தோலிக்க திருச்சபை மற்றைய சமயங்களை ஏற்றுக்கொள்ளுகின்ற தன்மையை மற்றைய மதங்கள் மட்டில் சகிப்பது தன்மையை கொண்டிருக்க வாய்ப்பு இல்லை. எனவே தான் எம்நாட்டுக்கு மறைபரப்ப வந்த மறைபரப்பாளர்கள் பிற சமய தெய்வங்களை பேய்கள் என்றும் இன்னும்

பொங்கல் போன்ற நன்றி விழாக்களின் படையல்களை காலால் மிதித்தும் செயற்பட்டனர். இன்று இந்த நிலை மாறி தமிழர்கள் கொண்டாடி வந்த பொங்கல் விழாவை கிறிஸ்தவர்களும் நன்றி விழாவாகச் கொண்டாடும் நிலை உருவாகியுள்ளது.

இன்னும் சமூக நீதிக்காக அனைத்து மதங்களும் இணைந்து குரல் கொடுக்கும் நிலையும் இந்த சங்கத்தினால் உருவாக்கப்பட்டது. மக்களின் மனதில் உள்ள மனச்சாட்சி இதற்கு ஒரு பொதுவான அடித்தளம் என்பதனை சங்கம் வெளியிட்டது. இன்னும் உண்மைகள் கிறிஸ்தவ மதத்தில் மட்டுமே உண்டு என்ற நிலையில் இருந்து, இதன் அமைப்பிற்கு வெளியே தூய்மைநிலை, உண்மை ஆகியவற்றின் கூறுகள் காணப்படுகின்றன (LG 8) என்ற நிலைப்பாடும் ஓர் புரட்சி கரமான சிந்தனையாகும். இதுவே மற்றைய மதங்களை ஏற்றுக்கொள்ளும் தன்மைக் கும் இன்னும் அவற்றுடன் உரையாடல் ஏற்படுத்த வேண்டும் என்ற நிலைக்கும் இட்டுச் சென்றது.

எல்லா மனிதர்கட்கும் மதச் சுகந்திரம் உண்டு சிறப்பாக மதவிடயங்களில் தங்கள் மனச்சாட்சியின் படி எதுவித தடையும் இன்றிச் செயல்படும் உரிமை உண்டு. எல்லா மத சமூகங்களும் தங்கள் மதச் சட்டங்களை எதுவித தடையும் இன்றி பின்பற்ற உரிமையுண்டு என இச்சங்கம் முழங்கியது.

## 3. பிரிந்த சபைகளுடன் உறவுகள்

பலகாலமாக கத்தோலிக்க திருச்சபைக்கும் பிரிந்த சபைகளுக்குமிடையே இருந்த பனிப்போருக்கு இந்த சங்கம் முடிவு கட்டியது.

> பிரிவினைகளுக்கு கத்தோலிக்க திருச் சபையும் காரணம் என்பதனையும் கத்தோலிக்க திருச் சபையிலும் ஓர் தொடர் புதுப்பித்தல் தேவை என்பதனையும் ஏற்றுக் கொண்டது.

பிரிவினைகளுக்கு கத்தோலிக்க திருச்சபையும் காரணம் என்பதனையும் கத்தோலிக்க திருச்சபை யிலும் ஓர் தொடர் புதுப்பித்தல் தேவை என்பதனை யும் ஏற்றுக்கொண்டது. நற்செய்தி விழுமியங்களின் படி ஒவ்வொர் திருச்சபையும் தன்னையே புதுப் பிக்கும் போது தான் திருச்சபைக்களின் ஒன்றிப்பு (renunciation) நடைபெற முடியும் என்று இச் சங்கம் முழங்கியது. பிரிந்த சபைகள் எல்லாம் மாற்றம் பெற்று நிலையான கத்தோலிக்க திருச் சபையிடம் வருவதே ஒன்று சேர்க்கைக்கு வழி என்று சொல்லி வந்த கத்தோலிக்க திருச்சபை

இவ்வாறான ஓர் நிலைப்பாட்டை எடுத்தமை மிக முக்கியமான ஓர் மாற்றமாகும். அண்மையில் எம்முன்னால் திருந்தந்தை மதிப்புக்குரிய இரண்டாம் யோவான் பவுல் முழந்தாளில் இருந்து கத்தோலிக்க திருச்சபை கடந்தகாலங்களில் செய்த தவறு களுக்காக மன்னிப்பு கேட்டமை உலகத்தோரால் மிகவும் போற்றப்பட்ட ஓர் விடயமாகும்.

## 4. திருவழிபாட்டில் மாற்றம்.

இந்த சங்கம் நடைபெறாது இருந்திருந்தால் இன்றும் வழிபாடுகள் புரியாத ஒரு மொழியில் குருவான வருக்கு மட்டுமே உரித்தான ஒரு நிகழ்வாகவும் மக்கள் பார்வையாளர்களாகவும் இருக்கின்ற ஒருநிலை தொடர்ந்து வந்திருக்கும்.

இந்த சங்கம் நடைபெறாது இருந்திருந்தால் இன்றும் வழிபாடுகள் புரியாத ஒரு மொழியில் குருவானவருக்கு மட்டுமே உரித்தான ஒரு நிகழ்வாகவும் மக்கள் பார்வையாளர்களாகவும் இருக்கின்ற ஒருநிலை தொடர்ந்து வந்திருக்கும். நற்கருணைக் கொண்டாட்டம் என்பது பொதுக் குருத்துவ மக்கள் (Priestly people) அனைவரின் கொண்டாட்டம் என்பதனை மீண்டும் நினைவூட்டியது. இதன் காரணமாக ஓர் புரியும் வடிவத்தில் எல்லா மக்களின் துடிப்பான பங்கெடுப்போடும், பாடல்களோடும், இன்றும் எல்லா மக்களும் உணர்ந்து புரிந்து நற்கருணையில் பந்தியில் பங்கு பெறத் தொடங்கினர். இன்றும் திருவழிபாடு மக்களின் கலாசாரத்துக்கும் நிலைகளுக்கும் ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்டது.

## 5. வேதாகமம் முன்னிலைப்படுத்தப்படல்.

வேதாகமமே இறையியலின் ஆன்மா என்பதனை இச்சங்கம் ஆணித்தரமாக எடுத்துரைத்தது.

இச்சங்கம் நடைபெறாதிருந்தால் எம் திருச்சபையின் இறையியல், மறையுரைகளில் மக்களின் ஆன்மீகத்தில் வேதாகமம் ஓர் இடத்தைப் பிடித்து இருக்க முடியாது. நற்செய்தி அறிவிப்பு, மறையுரைகள், மறைக்கல்வி இன்னும் கிறிஸ்தவ வாழ்வின் எல்லா நிலைகளும் வேதாகமத்தினால் உள்ளடங்கப்பட்டதாக அமைய வேண்டும் என்பதனை இச்சங்கம் வலியுறுத்தியது. ஆக வேதாகமமே இறையியலின் ஆன்மா என்பதனை இச்சங்கம் ஆணித்தரமாக எடுத்துரைத்தது.

மேலும் இச்சங்கத்தின் பின்னர் வேதாகமத்தை படிக்கும் போது வரலாற்று திறனாய்வு (Historical–Critical exegesis) செய்யப்படும் நிலை திருச்சபையில்

ஏற்பட்டது. வேதாகமத்தில் தவறுகள் இல்லை (inerrancy of Scriptures) என்பது மீட்புக்கான அடிப்படை உண்மைகளுக்கு மட்டுமே (fundamental truths of salvation) பொருந்துமே தவிர அதில் உள்ள வரலாற்று விஞ்ஞான ரீதியான கூற்றுக்களுக்கு அல்ல. உதாரணமாக தொடக்க நூலில் உலகம் படைக்கப்பட்ட விதத்தை உலகம் தோன்றியதற்கான விஞ்ஞான விளக்கமாக நோக்காது கடவுள் படைக்கும் சக்தி கொண்டவர் என்பதனை மட்டும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறன நிலைப்பாடு இல்லாமல் வேதாகமம் வரலாறு விஞ்ஞானம் (Scientific –historical statements) போன்ற விடயங்களிலும் தவறுகள் அற்றது என்ற நிலைப்பாடு காரணமாகவே கலிலியோ பூமி சூரியனைச் சுற்றி வருகின்றது என்ற புதுமையாக சொன்ன போது அவரைக் கண்டித்தது. இவ்வாறான தவறுகளைக் களைய நாம் வேதாகமத்தை படிக்கும் போது அது எழுதப்பட்ட சூழ்நிலைகளைப் படித்து அதனுள் சென்று இதனைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நிலை இச் சங்கத்துக்குப்பின் தான் ஏற்பட்டது.

இவ்வாறாக வேதாகமம் முன் நிலைப்படுத்தப்பட்டு திருப்பலி இல்லாத இடங் களிலும் இன்று பொது நிலையினரால் வேதாகமம் வாசிக்கப்பட்டு வார்த்தை வழிபாடு செய்யக் கூடிய அளவுக்கு இச் சங்கம் உதவிபுரிந்துள்ளது.

## 6. திருச்சபை இயலின் மாற்றம்

> இச்சங்கம் நிகழாவிட்டால் இன்றும் திருச்சபை என்பது சர்வதிகாரம் கொண்ட இயற்கைக்கு அப்பால்பட்ட ஒரு ஆட்சி (Supernatural Imperium Romanum) ஆகவே இருந்திருக்கும்.

இச்சங்கம் நிகழாவிட்டால் இன்றும் திருச்சபை என்பது சர்வதிகாரம் கொண்ட இயற்கைக்கு அப்பால்பட்ட ஒரு ஆட்சி (Supernatural Imperium Romanum) ஆகவே இருந் திருக்கும். இதன் உச்சியில் திருந்தந்தை சர்வ அதிகாரம் கொண்ட ஓர் அரசர் போலவும் (Absolute Monarch) இவருக்கு கீழ் ஆயர் கள் குருக்கள் உயர்ந்த நிலையில் ஆட்சி நடத்துபவர்களாகவும் (aristocracy of bishops and priests) இறுதியாக அடிமட்டத்தில் இறை மக்கள் மந்தமாக வழிநடத்தப்படுவர்களாகவே (Passive subjects) இருந்திருப்பர். இது திருச்சபையை ஓர் திருநிலையினரை மையப்படுத்திய (clericalistic), சட்டங் களை மையப்படுத்திய (legalistic), புகழை வெற்றியை மையப்படுத்திய (triumphalistic) ஓர் மாதிரிகை (model) ஆகவே இருந்திருக்கும். இதன் காரண மாகவே அன்று பல பிரிவினைகள் திருச்சபையில் ஏற்பட்டது.

ஆனால் இச்சங்கத்துக்குப்பின்னர் திருச்சபையை பற்றிய கண்ணோட்டம் மாறியது. அதிகாரம் கொண்ட கூம்பு வடிவான கோபுர அமைப்பிலிருந்து (hierarchical pyramid) திருச்சபை என்பது விசுவாசம் கொண்ட தோழமை வாழ்வு (communion of the faithful) என்ற நிலைக்கு மாறியது. திருச்சபை என்பது உலகில் இருந்து கொண்டு இறைவனை நோக்கி பயணம் செய்யும் ஓர் யாத்திரிகர் கூட்டம். அது எப்போதும் தன்னுடைய பாவத் தன்மையையும், இறைவனில் தங்கியிருக்கும் தன்மை யையும் மனதில் கொண்டு எப்போதும் புதுப்பித்தலுக்கு திறந்த மனத்துடன் இருக்க வேண்டும். திருச்சபையில் பணிகளில் இருப்பவர்கள் இறைமக்களுக்கு மேற்பட்டவர் அல்லர் ஆனால் இறைமக்களின் ஒருவரொருவராக உள்ளனர். இவர்கள் ஆட்சியாளர்கள் அல்ல வேலைக்காரார் (Servants) அல்லது பணியாளார். இவ்வாறாக பொதுக் குருத்துவம் என்பது மிகவும் உயர்வாகக் கருதப்படும் நிலை தோன்றியது.

> திருச்சபை என்பது உலகில் இருந்து கொண்டு இறைவனை நோக்கி பயணம் செய்யும் ஓர் யாத்திரிகர் கூட்டம்.

## முடிவுரை:

இரண்டாம் வத்திக்கான் சங்கமானது நம் திருச்சபையின் கதவுகளையும் யன்னல்களையும் திறந்து புதிய காற்றை திருச்சபைக்குள் திறந்துவிட்டது. இதன் காரணமாக திருச்சபையில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று ஆவியானவரின் தூண்டுதலால் முழக்கமிட்டது. இந்த முழக்கத்தை அது வெளியிட்ட 16 ஏடுகளில் நாம் காணக்கூடியதாக உள்ளது. எனவே நாம் வேதாகமத்தை ஒரு கையிலும் இந்த சங்க ஏட்டை மறுகையிலும் வைத்து எம் ஆன்மீக பயணத்தை மேற்கொள்ளும் போது இச்சங்கம் கொண்டிருந்த தீர்க்க தரிசன பார்வை எம் ஆன் மிக வாழ்விலும் மணம் கமழும். எனவே இச் சங்கம் நடைபெற்று 40 ஆண்டுகளின் நிறைவில் இருக்கும் நாம் அதன் பாதையில் நடக்க முயலுவோம்.

இறையியலாளர்

# இவ்விதழின்

21

அருட்சகோதரி. விக்ரறின் செல்வதி
மலக்கியாஸ் *தி.கு.*

# புனித 10ம் பத்திநாதர்
# Pope Pius X

## வாழ்க்கைக் குறிப்பு

இவர் வெனிஸ் ஆட்சிப் பகுதிக்குள் ரியேசே கிராமத்தில் கி.மி. *1835*ஆம் ஆண்டு பிறந்தார். இவரது ஞானஸ்நானப் பெயர் ஜோசப் மெல்க்கியோர். இவர் ஏழைக் குடும்பத்தில் இரண்டாவது பிள்ளையாகப் பிறந்தார். இவர் காசில் பிறாங்கோ என்ற கல்லூரியில் கல்வி கற்று வந்தார். குருத்துவ நிலைக்கு உயர்த்தப் பெற்று தம் பணியை மிகச் சிறப்பாக ஆற்றினார்.

மாந்துவா ஆயராகவும், பின்பு வெனிஸ் திருச்சபையின் பிதாப்பிதாவாகவும் நியமனம் பெற்று, *1903* ஆம் ஆண்டில் திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பெற்றார். அனைத்தையுமே கிறிஸ்துவுக்குள் புதுப்பிக்கவேண்டும். என்ற நோக்கத்துடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அதை உள்ளத்தின் நேர்மையாலும் வாழ்வின் ஏழ்மையாலும் மன உறுதியாலும் நிறைவேற்றி முடித்தார். இப் பண்புகளால் விசுவாசிகளிடையே கிறிஸ்தவ வாழ்வைத் தூண்டி வளர்த்தார்.

"நான் ஏழையாகப் பிறந்தேன், ஏழையாக வளர்ந்தேன், ஏழையாக இறக்க விரும்புகின்றேன்" என தமது மரண சாசனத்தில் இவர் எழுதி வைத்திருக்கின்றார். 1914 ஆம் ஆண்டு திங்கள் 20ஆம் நாள் இவர் உயிர் நீர்த்தார்.

## பத்தாம் பத்திநாதரின்பணித்தொகுப்புகள்

1. தப்பறைக் கொள்கைகளை எதிர்த்தார்.
2. வழிபாட்டுப் பாடல்களை சீர் திருத்தினார்.
3. மக்கள் உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழ இறைவழிபாடனது உதவியாயிருக்க வேண்டுமென்று வழிகள் பல வகுத்தார்.
4. மறைக் கல்வியை ஒவ்வொரு பங்கிலும் கற்பிக்க வேண்டுமென்று வற்புறுத்தினார்.
5. புத்தி விபரம் அறிந்த சிறுவர்களுக்கு திவ்விய நன்மை வழங்கலாம் என்று சட்டம் இயற்றினார்

இவர் நற்கருணையின் பாப்புவாக, சமாதானத்தின் பாப்புவாக, துன்பத்தின் பாப்புவாக அழைக்கப்படுகின்றார்.

## நற்கருணையின் பாப்புவாக அழைக்கப்படுவது ஏன்

நற்கருணை ஆன்ம பலத்தினதும், ஊற்றினதும் வரப்பிரசாதத்தின் ஊற்றிலிருந்து பாவியை தள்ளி விடுகிறது என்ற பேதகம் எழுந்தபோது, அதைத் தடுத்து 1906இல் தீர்மானத் தொகுப்பை எழுதினார்.


ஒவ்வொரு நாளும் திவ்விய நன்மை வாங்குகிறவர்கள். இயேசுவுக்கு பிரியப்படும்படி இயேசுவோடு ஒன்றித்து, குற்றங்களை விலக்க ஒரு மருந்தாக நற்கருணை அமைகின்றது என்பதை வலியுறுத்தினார். மோட்சத்திற்கு செல்ல குறுகியதும், நிச்சயமானதுமான வழி நற்கருணை என மொழிந்தார். திவ்விய நன்மை வாங்கிய பின் ஒவ்வொருவரும் யேசுவுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று நிரூபம் எழுதித் தெரிவித்தார். இதனால் இவர் நற்கருணையின் பாப்புவாக அழைக்கப்படுகின்றார்.

## சமாதானத்தின் பாப்பு:

19ஆம் நூற்றாண்டில் மேற்கத்தைய நாடுகளில் போர் மூண்டபோது, மடல்கள் மூலம் ஆயர்களுடன் தொடர்பு கொண்டு இறைவனின் இரக்கத்தை வேண்டும்படியும், சமாதானம் நிலவ செபிக்கும் படியும் அழைப்பு விடுத்தார்.

## துன்பத்தின் பாப்பு

இவரது வாழ்வு முழுவதும் துன்பப்படுவோருக்காக கண்ணீர் சிந்தி அனுதாபப்பட்டார் பல்வேறு நாடுகளில் நடைபெறும் இயற்கை அழிவுகள், அடிமைத்தனங்கள், கலாபனைகள் என்பவற்றால் துன்பப்படும் மக்களுக்கு ஆறுதல் கூறியும், இரக்கங் காட்டியும், பொருளுதவியும் செய்து வந்தார். இதனால் இவர் துன்பத்தின் பாப்புவாக அழைக்கப்படுகிறார்.



# SYNOPSIS

## Natural Disasters in Theological Perspective

*Rev. Sr. A. Rajani H.C.*

No one will deny the fact that this year 2005 has been a year of natural disasters. The year started with the unforgettable memory of the loss of 400,000 people instantly by the Tsunami and millions of properties destroyed. Then flooding in India, forest fire in Indonesia; the hurricanes such as Wilma, Reeta, Alpha; the earthquake in Pakistan, etc. have caused untold destructions in the whole universe.

There are ample questions why all these happen or rather why then does God allow all these sufferings? The affected as well as others ask these questions. Different Religions give different answers. Islam would say that when man does not do the will of Allah Iibulisu comes in such forms and attacks. Buddhism traces that when nature is destroyed man gets destroyed. Hinduism would say that these are the anger of the Gods upon human beings because of heir impure deeds. But we Christians firmly believe that our God is Love and merciful. He never intends to destroy his loving people and gets satisfaction. We, human beings, continually destroy nature for our own selfishness and consequently, nature reacts. When all these disasters happen God allows because he has given us the freedom to choose and act.

Moreover, we cannot understand the mind of God. He is omnipotent and omniscient at all times.

Whatever disasters or destruction happen we should not lose our hope.

# The Eucharistic Year - Clergy and Laity

*Rev .Fr. J.P. Thayaparan*

Our late Pope John Paul II proclaimed the last liturgical year as the 'year of the Eucharist', in order to deepen our knowledge and strengthen our faith in the mystery of the Eucharist and live it as our daily experience.

Jesus Christ, the High Priest offered himself, his Body and Blood, in sacrifice to God the Father and redeemed the whole humanity. The promise "Lo, I am with you always to the close of the age" (Mt. 28:20) is fulfilled by the unique presence of Christ in the Holy Eucharist.

The church draws her life from the Eucharist. The second Vatican Council rightly proclaimed that the Eucharistic sacrifice is "the source and summit of the Christian life."

"The Lord Jesus on the night he was betrayed" (1 Cor.11:23) instituted the Eucharistic Sacrifice of his body and his blood as well as the Priesthood to continue his sacrifice and mission. So the sacrament of Eucharist and Priesthood are so incorporated and cannot be separated. "The Eucharist is the centre and summit of priestly ministry." The celebration of the Eucharist is the most important moment of the priest's day, the centre of life and ministry.

Though the ordained priest who acting in the person of Christ, brings about the Eucharistic sacrifice and offers it to God in the name of all the people, the faithful also join in the offering of the Eucharist by virtue of their royal priesthood.

In the year of the Eucharist several efforts and activities took place for the priest and laity to foster the Eucharistic faith. The year of the Eucharist was the gift of God to renew our Eucharistic life.

# Pope John Paul II, Women and the Holy Eucharist

*Rev. Fr. J.A. Arulthasan*

**P**ope John Paul II had a great devotion to the most Holy Eucharist, and the Blessed Mother. Mary and the Eucharist are mostly the main themes in his 14 encyclicals 68 apostolic letters. The Holy father urges the Christ's faithful to be more faithful to Christ by unfolding the revealed mysteries of the Holy Eucharist through his Encyclicals; The Eucharist unites and strengthens the church, It makes the suffering, death, and resurrection of Christ present. Thus Christ is present in the church through the celebration of the Eucharistic banquet. The Virgin Mary is the first women who lived the life of the Eucharist; and she is closely connected with the Eucharist. So, she is called "The women of the Eucharist" in the encyclical "Ecclesia de Eucharistia".

The Pope voiced out for the oppressed. He stressed in his encyclical "The dignity of the women" that the equality and the dignity of the women should be respected. In his encyclical "Ecclesia in Asia" he mentioned that to make the church as a participatory church; It must give the place for women to involve in the activities of the church.

The devotion and the love of Pope John Paul II towards the holy Eucharist, and the Blessed mother, strengthened and nourished him to guide the faithful of the universal church to Christ.

# A Dawn from Heaven

*Rev. Bro. Fr. A. Christy Ruban Fernando*

**W**e have seen signs of time especially in our personal context. The whole of Sri Lanka is in untold fear for what would happen in the next moment. If there is no news of murders, shootings, kidnappings or rapings that will be the hot news. We have almost lost hope for peace. In this devastating situation what is this 'Dawn from Heaven'. Yes, that is the Birth of Jesus Christ the hope from heaven to boost our lost stamina.

The whole world prepares to celebrate Christmas on a big scale, but what is the big celebration that Christmas demands. That is to destroy our enmity, selfishness and violence and embrace brotherly concern. Then only will our celebration become meaning ful. Every year we celebrate Christmas. Jesus is born; we have to ask the question whether he is born in our hearts also or as usual only in the manger.

God worried about the life of the Israelites. He says "I reared children and brought them up but they have rebelled against me, the ox knows its owner and the donkey its masters' crib but Israel does not know, my people do not understand" (Is: 1:2-3) So,God became man, man could not go towards God; so God came down towards man. Let us accept and welcome that God within our hearts leaving out all our racial and ethnical partialities.

# The Second Vatican Council After Forty Years

**Rev. Bro. Fr. M. David**

Having walked for forty years after the second Vatican council, we have to analyze and see how much the decision and proposals, made by 2,600 Bishops, theologians, he representatives from all the countries, non-Catholic participants and members form the Russian Orthodox Church, have impressed the thinking pattern of the "Pilgrim Church". Among all the General Councils that were held in the life of the Church the Second Vatican council becomes the first Council in which comparatively more people from all over the world took part.

The Second Vatican council is the fruit of the Holy Spirit who is the source and foundation of the life of the Church. With the Council the Church became visibly seen as spirit – filled and spirit – led family. If there was not such a Council in the Catholic Church, it would not have come to a position to accept and to show respect to the other religions. This is the Council ha iniiaes with much urgency the dialogue with the other religions and for Ecumenism among the separated Christians. For the first time the Catholic Church accepted the mistakes it had made on its part for the separation of the fellow Christians and this paved waved the way for real Ecumenical efforts to come up in the Church.

The Second Vatican Council brought a new vision in the Liturgical services of the Church. The people were able to participate in the liturgical celebrations in their own languages and also in their own cultural context. The Council emphasized the importance of the Holy Bible and because of the Council the Laity is also able to have a

profound knowledge of the Bible and they are able to conduct Bible services on Sundays when they are unable to have a priest to have a mass on Sundays.

This Sacred Council also paved the way to come to understand the structure of the Church in a different way. The absolute monarchical structure and the aristocracy of the bishops and priests were destroyed. The faithful were not merely considered as passive subjects but a prime role was entrusted to them in the structure of the Church. After the Second Vatican Council the church and its movements shifted form the hierarchical pyramidal structure to the concept of communion of the faithful.

## வாசகரிடமிருந்து......

Mr. V. Nishanthan (Passaiyoor)

'Irai Iyal Kolankal' helps me to know more about my faith. The 'Synopsis' is a very useful feature. I am proud of be a reader of this periodical. My thanks and best wishes to the administrative committee.

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 20

## முடிவுகள்

**சரியான விடைகள்:**

*இடமிருந்து வலம்*

1. ஒப்புரவு
6. நியதி
12. சாயல்
16. உரையாடல்
23. மறதி
26. மறுவாழ்வு

*மேலிருந்து கீழ்*

3. புதிய உறவு
5. மறுவுலகில்
6. நிமிடம்
12. சாரை
14. மதியால்

### பரிசு பெறுவோர்

*1ம் பரிசு :*
*எஸ்.அனுசியா*
**697 கச்சேரி நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

*2ம் பரிசு :*
*தா. வனிஸ்ரன்*
**இல. 1 புதுவீதி,**
**பாஷையூர்,**
**யாழ்ப்பாணம்.**

*3ம் பரிசு :*
*இ. ஒலேன்டா*
**பழைய சந்தை வீதி,**
**நவாலி தெற்கு,**
**மானிப்பாய்.**

## சரியான விடை எழுதி பாராட்டுப் பெறுவோர்

J. *ம. மேரி ஜீன்,* நாவாந்துறை; J. *செறின் யூடினா,* J. *நிலான் யூலியஸ்,* இளவாலை; *ர. யசோதினி,* இராசாவின் தோட்டம்; *இரா. ரமணன்,* சென் பற்றிக்ஸ் கல்லூரி; *அ. மேரி ஆன் டெலஸ்ரீனா,* பருத்தித்துறை; *லூமின் கொன்சேகா,* சக்கோட்டை; *கொ. றெஜின்,* பாஷையூர்.

**இதோ ஒரு நற்செய்தி**

கடந்த காலங்களில் நடைபெற்ற குறுக்கெழுத்துப் போட்டிகளில் அதிகமான போட்டிகளில் பங்குபற்றி சிறப்புப்பரிசு பெறுவோரின் விபரங்கள் அடுத்த இதழில் வெளியிடப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 21

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | |
| 19 | 20 | 21 | | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

அனுப்புபவரின் பெயர் :

விலாசம் :

### இடமிருந்து வலம்:

01. 26-12-2004ல் இடம்பெற்றது. (6)

09. மேடை (குழம்பியுள்ளது) (4)

19. இது இல்லாமல் விளக்கு எரியாது. (2)

25. யோவான் பவுல் லூக். 4:18ஐ தாரக ____ கொண்டு குரல் எழுப்பினார். (குழம்பியுள்ளது) (3)

31. குருக்கள் மன உறுதியையும் இதனையும் இப்பலியில்தான் பெறுகின்றனர். வலமிருந்து இடமாயுள்ளது (6)

மேலிருந்து கீழ் :

01. கடவுள் எம்முடைய இதில் கைவைக்க விரும்புவதில்லை. (6)

04. 2005 ஒக்டோபர் மாதம் உரோமையில் ஆயர்களின் இது நடைபெற்றது. (3)

08. முதல் நற்கருணைப் பேழை. (தலைகீழாயுள்ளது) (4)

09. முன்னாள் திருத்தந்தை எழுதிய திருமுகங்களின் தொகை தலைகீழாயுள்ளது. (5)

11. ஒரு தீவுக்கூட்டம் (5)

24. ஒரு விடயத்தை பல கோணங்களில் பார்த்தலை இவ்வாறு அழைக்கிறோம். (தலைகீழாயுள்ளது) (3)

- **விடை எத்தனை எழுத்துக்களால் ஆனது என்பதை அடைப்புக் குறிக்குள் உள்ள எண் குறிக்கும்.**
- **விடைகளில் பல இவ்விதழின் கட்டுரைகளில் உள்ளன.**
- **விடைகளை அனுப்ப மேலுள்ள கூப்பனை மட்டுமே பாவிக்கவும்.**
- **விடை வந்து சேரவேண்டிய இறுதி நாள். 28-02-2006**

## முகவரி

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 21

**இறையியல் கோலங்கள்,**
**புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**



# அன்பான வாசகர் நெஞ்சங்களே.

உங்கள் கரங்களில் இறையியல் கோல சஞ்சிகை இலகுவில் கிடைப்பதற்காக நாம் சில இடங்களுக்கு முகவர்களை நியமித்துள்ளோம். இந்தப் பணியை ஆற்ற முன்வந்துள்ள இவர்களை அன்புடன் வரவேற்பதோடு இவர்கள் பணிசிறக்க உங்கள் ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்கும்படி அன்புடன் கேட்டு நிற்கின்றோம்.

நன்றி

## முகவர்கள்

1. பாண்டியன்தாழ்வு பங்கு – திரு. மரியநாயகம்
   தூய அன்னாள் ஆலயம்,
   பாண்டியன்தாழ்வு.
2. நாவாந்துறை பங்கு – செல்வி ம. செல்நாயகி
   தூய நீக்கிலார் ஆலயம்,
   நாவாந்துறை.
   செல்வி ரூபா
   தூய மரியன்னை ஆலயம்,
   நாவாந்துறை.
3. இளவாலை மாரீசன்கூடல் பங்குகள் – செல்வன் பே. றொனிபஸ்
   மாரீசன்கூடல், இளவாலை.
4. சக்கோட்டைப் பங்கு – செல்வி ஏ. நேசநாயகி [சுசி]
   தூய சவேரியார் ஆலயம்,
   சக்கோட்டை.
   செல்வி ஏ. லுமின் கொன்சேகா
   குழந்தை இயேசு ஆலயம்,
   பொலிகண்டி.
5. சுண்டிக்குளி பங்கு – செல்வி றொபிற்றா சாந்தினி செல்வநாயகம்
   தூய திரேசா ஆலயம், சுண்டிக்குளி
   செல்வி லூட்றொய்சியா லூர்த்துநாயகம்
   தூய திருமுழுக்கு யோவான் ஆலயம்,
   சுண்டிக்குளி.

Printed By: A.C.M. Press, Jaffna. Tel. No. 222 9102

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்

ஆண்டுச் சந்தா உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 100/=

வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) U.S.$ 10

Euro 8

தனிப்பிரதி 30/=

தொடர்பு கொள்க :

**இறையியல் கோலங்கள்**

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி

கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021 222 2482, 021 222 7145

# IRAI IYAL KOLANGAL

A Tamil Theological Quarterly

Annual Subscription : Local (Incl. postage) Rs. 100/=

Foreign (Incl. postage) US $ 10

Euro 8

Single Copy Rs. 30/=

Correspondence to:

**Irai Iyal Kolangal**

St. Francis Xavier's Seminary

Columbuthurai, Jaffna

Sri Lanka.

Tel: 021 222 2482, 021 222 7145